



அட்டையை அலங்கரிப்பவள்

அன்னை அன்னபூரணி

சோழவளநாடு சோறுடைத்து என்ற பெருமையை நிலைநாட்டியவள். மூடி வைத்திருக்கும் அமுத கலசத்தைத் திறந்து பரிமாற அவள் மனது வைத்துவிட்டால், நாட்டில் உள்ள பசியும் பிணியும் அகன்று வசியும் வளனும் பெருகி விடாதா?

கலைக்கூடம் - தஞ்சை

— அரண்மனைக் கட்டிடம் —



கலைவிழா சிற்ப மடல்

(படங்களுடன்)

தலைவர்

ஸ்ரீ. ஆர். எம். சுந்தரம், ஐ. சி. எஸ்.

கலெக்டர் - தஞ்சை

திருப்பனந்தாள் காசிமடத்தார் அன்பளிப்பு.



பிர்ம்மா

கலைக்கூட சிருஷ்டி கர்த்தா

அவருடன் ஒத்துழைத்தவர்கள்

ஸ்ரீ டி. கே. பழனியப்பன், ஐ. ஏ. எஸ்.

,, தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், எம். ஏ.

,, என். விஸ்வநாத அய்யர், பி. ஏ., பி. இ.

,, எஸ். ராமச்சந்திர பத்தர், பி. ஏ.

★

சமர்ப்பணம்



★

குன்று தோறும் குமரனுக்கு

★

★

★

படங்களும் விளக்கங்களும்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

காரியதரிசி, கலைக்கூடம்

★

கலைக்கூடம் - தஞ்சை.

(பார்ப்பதற்கு முன் படிக்க)

ஒரு சிற்பி, ஒரு நாள் கல்லில் ஒரு தெய்வத் திரு உருவைச் செதுக்கிக் கொண்டிருந்தான். நல்ல நான்கு ஐந்தடி நீளம் உள்ள கல் அது. மேல்ப் பகுதி செதுக்கப்பட்டு முடிந்திருந்தது. இதைப்பார்த்தான் ஒரு பட்டிக்காட்டான், சிற்பியின் உறவினன். அவன் கேட்டான் 'இந்தச் சாமி இந்தக் கல்லுக்குள் இருக்கிறது என்பதை எப்படி அண்ணே கண்டு பிடித்தாய்?' என்று. இது கொஞ்ச காலத்துக்கு முன் பத்திரிகையில் வந்த ஒரு ஹாஸ்யத் துணுக்கு.

எவ்வளவு பெரிய உண்மை இப்படி ஹாஸ்யமாக உருவாகி இருக்கிறது. எல்லா இடத்தும், நிறைந்து நிற்கும் இறைவன் கல்லுக்குள்ளும் இருக்கத்தானே செய்கிறான். இதனை உணர்ந்து, கல்லுக்குள் கனியாக இருப்பவனை வெளிக்கொணர்வது, ஏதோ கையைப்பிடித்து வெளியே இழுத்து விடுவதுபோல், அவனை உருவாக்கிக் கொண்டுவருவது என்பது எவ்வளவு சிறந்த வேலை. மேலும், கல்லிலே உருவத்தைச் செதுக்குமுன்பே, அந்த உருவத்தை கற்பனை செய்து, அதை உள்ளத்தில் உருவாக்கி, அங்கேயே வடிவம் முழுவதையும் வடித்தெடுக்க வேண்டுமே! உள்ளக்கிழியில் உரு எழுதிய பின்தானே, தாளிலோ, துணியிலோ, கல்லிலோ, செம்பிலோ அந்த உருவம் தோன்ற முடியும்.

உருவமே இல்லாத கடவுளுக்கு, ஒரு உருவம் கற்பிப்பது, அந்தக் கற்பனைக்கு உள்ளத்திலேயே உருவம் சமைப்பது, அப்படிச் சமைத்த உருவத்தைப் பின்னால், கல்லிலும் செம்பிலும் பெயர்த்துக் காட்டுவது என்பதெல்லாம் எளிதான சாதனையா என்ன? அந்த அற்புத சாதனையைச் செய்தவர்கள் சிற்பிகள். அவர்களைத்தான் கலைஞர்கள் என்று கூறுகிறது உலகம்.

ஏதோ வண்ணத்தாலும் சுண்ணத்தாலும் சித்திரம் தீட்டுபவர்கள் உண்டு. அப்படித்தீட்டிய சித்திரங்கள்தான்

மேல் நாட்டில் அனந்தம். வண்ணத்திலும் சுண்ணத்திலும் சிறந்த எண்ணங்களையும் புகுத்திச் சித்திரத்தையும், சிற்பத்தையும் உருவாக்கியவர்கள் தான் நம் நாட்டுச் சிற்பிகள், சித்ரீகர்கள்.

கடவுளை நேருக்கு நேர் கண்டவர்களோ இல்லை. "கண்ணால் ஈசன் திருமேனி கண்டார் எவரும் உண்டோ சொல்?" என்று அதட்டிக் கேட்டால் நம்மால் பதிலே சொல்ல முடியாது. தத்துவ தரிசனம் பெற்ற அப்பர் பெருமான்

திருகு குழல் உமை நங்கை பங்கன் தன்னை
செங்காட்டாங்குடி அதனில் கண்டேன் நானே

என்கிறார் முதலில்.

புனக் கொன்றைத் தார் அணிந்த
புனிதன் தன்னை
பொய்யிலியைப் பூந்துருத்தி
கண்டேன் யானே

என்று அழுத்தம் கொடுத்துப் பின்னும் பேசுகிறார். மறுபடியும் இப்படியே கண்டேன் யானே! கண்டேன் யானே! என்று களித்துக் கூத்தாடியவரும் கடைசியில் கையை விரித்துவிடுகிறார், 'இப்படியன், இந்நிறத்தன் இவன் இறைவன் என்று எழுதிக் காட்ட ஒண்ணாது' என்று. அப்பரைப் போலவே, அரன் அடிக்கு அன்பு செலுத்திய அந்தக் காரைக்கால் அம்மையாரும்,

அன்றும் திரு உருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திரு உருவம் காண்கிலேன்—என்றுமே
எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட்கு என்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது?

என்று அரனை கேட்டிருக்கிறார். 'இன்று எத்தனையோ பேர் இதைக் கேட்கிறார்களே, அவர்களுக்கு நான் என்ன பதில்சொல்ல?' என்று அங்கலாய்த்து அல்லவா கேட்கிறார் இந்த அம்மை.

இப்படியே கேட்டிருக்கிறார்கள் எத்தனையோ பேர் அன்றே. ஆனால் சும்மா ஆளை மிரட்டுவதற்காக கேள்வி கேட்காமல், இவர்கள் இந்தக் கேள்வியை தம் உள்ளத்துக்கு உள்ளேயே திருப்பி இருக்கிறார்கள், விடை கிடைக்கும் என்று

நம்பியிருக்கிறார்கள், விடைக்காக எத்தனையோ வருஷ காலம் தவம் கிடந்திருக்கிறார்கள். இப்படி நெடுங்காலம் தவம் கிடந்து பெற்ற விடைகள்தான், இன்று நாம் கல்லிலும் செம்பிலும் காணும் மூர்த்திகள்.

அண்ட அண்ட சராசரங்களையெல்லாம் ஆட்டிவைக்கிறான் இறைவன். அப்படி ஆட்டிவைக்கிறவன் தானும் ஆடிக்கொண்டே ஆட்டினால்தான் அண்டங்கள் ஆடும் என்று சிந்தித்திருக்கிறான் ஒரு கலைஞன். அவன்றன் கற்பனையில் உதித்திருக்கிறான் நடராஜன். எல்லா உயிர்களிலும் நிறைந்திருக்கிறது ஆண் பெண் என்ற இரண்டு தத்துவம். ஆணின்றிப் பெண்ணும் பெண்ணின்றி ஆணும் தனித்து வாழவோ உலக வளர்ச்சிக்கு துணை புரியவோ இயலாது. இரண்டும் ஒன்றிய நிலையில்த்தான் உலகம் உய்யும் என்று உணர்ந்திருக்கிறான் ஒரு கலைஞன். அவன்றன் சிந்தனையில் உருவாகி இருக்கிறான் மாதிருக்கும் பாதியன். தன்னைப் படைத்த தலைவனை அறியாது, உயிர்கள் எல்லாம் அவனைவிட்டு விலகி விலகி ஓடும்போது, அந்த உயிர்களை வழி மறித்து, அவர்தம் அன்பையும் ஆணவத்தையுமே பிச்சை கேட்கிறான் இறைவன் என்று எண்ணியிருக்கிறான் ஒரு கலைஞன். அவன்றன் எண்ணத்தில் உருவாகியிருக்கிறான் பிக்ஷாடனன்.

உலகெல்லாம் காத்தளிக்கிற பரம்பொருள் ஒன்று உண்டு. அது கண்ணைத் திறந்து சுற்றுச் சார்பிலே உள்ளத்தைப் பரவ விட்டுவிடாமல், கண்ணை மூடினாலும் கருத்தை மூடாமல், உயிர்களையெல்லாம், எப்பொழுதும் கண்ணும் கருத்தாய் காக்கிறான் என்று நினைத்திருக்கிறான். அந்த நினைப்பிலே தோன்றியிருக்கிறான் அந்த அறிதுயில் கொள்ளும் பரந்தாமன்.

நிரம்பச்சொல்வானேன். வையத்தில் வாழ்வாங்கு வாழும் வகைகளையெல்லாம் மக்கள் உணர, உணர்ந்து அதன்படி நடக்க தக்க வழிகாட்டியாக ஒரு லக்ஷிய புருஷன் வேண்டும் என்று சிந்தித்தவன்தானே "எகும் நல்வழி அல்வழி என்மனம்" என்னும் உறுதிப்பாட்டில் நிற்கும் ராமனை, ராமன் என்னும் அழகனை, வீரனை, தெய்வத் திரு உருவை சிருஷ்டிக்க முடியும்.

அகிலாண்டகோடி யீன்ற அன்னை என்கிறார்களே, அந்த அகில அண்ட கோடி உயிர்களையும் காத்தளிக்கும் பொறுப்பும் அவளுக்குத்தானே. அந்தப் பொறுப்பு வாய்ந்தவள் அரை விநாடி கண்ணை மூடினாலும் எத்தனை எத்தனை அனர்த்தங்கள் விளைந்துவிடும். ஆகலால் விழித்த கண் விழித்தபடியே இமை கொட்டாது நின்று அருள் புரிகிறாள் அவள் என்று எண்ணியவன் தானே, கண் இறப்பையே இல்லாது அல்லும் பகலும் அனவரதமும் விழித்த கண் விழித்தபடியே இருக்கும் மீன் கண்ணைப் பெற்றவள் அவள் என்று கற்பிக்கமுடியும். அவன்தானே அந்த அன்னைக்கு ஸ்ரீ மீனாக்ஷி என்று நாமகரணமும் செய்யமுடியும்.

இப்படித்தான் கலைஞர்கள் சிந்தனையில் கடவுளர் எல்லாம் உருவாகி இருக்கிறார்கள். சிந்தனையில் தோன்றியதையெல்லாம் கவியாக எழுதியிருக்கிறார்கள் கவிஞர்கள், சித்திரமாக தீட்டியிருக்கிறார்கள் சித்திரீகர்கள், சிலையாக வடித்திருக்கிறார்கள் சிற்பிகள். இத்தகைய சிற்பிகளது சிந்தனைச் செல்வத்தைத்தான், ஆம், தஞ்சை ஜில்லாவில் உள்ள செல்வங்களில் ஒரு சிலவற்றைத்தான் சேகரித்து வைத்திருக்கிறோம், கலைக்கூடத்தில். கல்லிலும் செம்பிலும் கண்ணுதலைக் காட்டமுயன்ற கலைஞர்களுக்கு இதன்மூலம் வணக்கம் செலுத்தியிருக்கிறோம்.

நல்ல கலை ஆர்வத்தோடு உருவான இந்தக் கலைக்கூடத்தில் இருக்கும் எல்லா சிற்ப வடிவங்களையும் இந்த மலர்மூலம் காட்டிவிடமுடியும் என்று நாங்கள் நம்பவில்லை. அவற்றில் ஒரு சிலவற்றின் உருவத்தையாவது - தஞ்சை வர இயலாதவர்கள் கண்டுகளிக்கட்டுமே என்றுதான் இச்சிறு நூலை வெளியிடுகிறோம். கலைக்கூடத்திற்கு வராத, வர இயலாத கலைச் செல்வங்களும் உண்டு, நிரம்ப உண்டு என்று காட்டவே மற்ற சிற்ப உருவங்களின் படங்கள் சிலவற்றையும் சேர்த்திருக்கிறோம். சிற்பக்கலையை பரிபூரணமாக அறிந்துகொள்ள இந்த நூல் உதவும் என்று சொல்லமாட்டோம். அது எங்கள் ஆசையும் அல்ல. சிற்பக் கலையில் ஒரு சிறு ஆர்வத்தை ஒரு சிலருக்காவது இந்த மலர் உண்டாக்குமானால் அதுவே பெரும் பாக்கியம் என்று கருதுவோம். அந்த ஆர்வத்தை ஊட்டுவதற்கு முயலுவோமே

என்றுதான் விளக்கங்கள் எழுதியிருக்கிறோம். விளக்கங்கள் எல்லாம், புராணக் கதைகளைக்கூறும்; அந்தக் கதைகளில் புதைந்து கிடக்கும் உண்மைகளைச் சொல்லும்; அந்த உண்மைகளுக்கும் அப்பால் ஒளிந்துகொண்டிருக்கும் அடிப்படைத் தத்துவங்களையும் விளக்கும்; எல்லாவற்றிற்கும் மேலாக கலைகளை அனுபவிக்க கண்ணையும் கருத்தையுமே தயார் செய்யும்.

இந்தச் சிற்ப வடிவங்களும் அதன் விளக்கங்களும், தமிழ் மக்களைமட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு வரையப் பட்டவை அல்ல. சமயத்தையும் மொழியையும், பண்பாட்டையும் கலாசாரத்தையும் கலைக் கண்கொண்டு நோக்கும் பிறநாட்டு நல்லறிஞர்களையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டேதான் எழுதியிருக்கிறோம்.

திறமான புலமை எனில்
வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்

என்று பாடினனே, பாரதி. அதுபோல, தம் திறமை முழுவதையும் காட்டி உருவாக்கிய நம் தமிழ்நாட்டுச் சிற்பிகளின் அற்புதச் சாதனையை வெளிநாட்டாரும் கண்டு வணங்கட்டும் என்னும் எண்ணமே எம் உள்ளத்தில் நிறைந்திருந்தது. வெளிநாட்டாரது பாராட்டுரைகளும் வெளிவந்திருக்கிறது இந்த மலரிலேயே.

இந்தக் கலைக்கூடத்தை சிருஷ்டிப்பதில் முனைந்து நின்றவர் ஸ்ரீ T. K. பழனியப்பன் I. A. S., அன்றைய கலெக்டர். அவர் அளித்துவந்த ஆதரவையும் அன்பையும் தொடர்ந்து காட்டுகிறவர் இன்றைய கலெக்டர் ஸ்ரீ R. M. சுந்தரம் I. C. S., அவர்கள். இருவருக்கும் தமிழ்மக்கள் மிகவும் கடமைப்பட்டவர்கள்.

கலைக்கூடத்தை உருவாக்குவதிலும் இந்த மலரைத் தயாரிப்பதிலும் எங்களுக்குப் பக்கபலமாக இருந்தவர்கள் எத்தனையோ பேர். அத்தனை பேருக்கும் எம் அன்பு கலந்த வணக்கம்.

இனிப் புகுந்துபாருங்கள் கலைக்கூடத்தை, இந்த மலருடன்.

தஞ்சை,
18-4-54.

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்,
காரியதரிசி, கலைக்கூடம்.

உள்ளுறை.

பார்வையிட்ட பிரமுகர்கள்.

ஸ்ரீ ஸ்ரீபிரகாசா,
சென்னை ராஜ்ய கவர்னர்.

ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார்,
சென்னை அரசாங்க முதல் அமைச்சர்.

ஸ்ரீ ஜயசாமராஜ உடையார்,
மைசூர் ராஜப்பிரமுகர்.

ஸ்ரீ பி. ஆர். தேஷ்முக்,
இந்திய அரசாங்க விவசாய மந்திரி.

ஸ்ரீ வி. வி. கிரி,
இந்திய அரசாங்க தொழில் மந்திரி.

ஸ்ரீ எம். வி. கிருஷ்ணப்பா,
இந்திய அரசாங்க உணவு, விவசாய உதவி மந்திரி.

ஸ்ரீ எம். ஏ. மாணிக்கவேலு நாயக்கர்,
சென்னை அரசாங்க ரெவின்யூ மந்திரி.

ஸ்ரீ கே. வேங்கடசாமி நாயுடு,
சென்னை அரசாங்க அறநிலைய பாதுகாப்பு மந்திரி.

ஸ்ரீ ஆர். நாகன்ன கௌடா,
சென்னை அரசாங்க விவசாய மந்திரி.

ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா,
ஒரிஸ்ஸா கவர்னர்.

ஸ்ரீ பி. வி. ராஜமன்னார்,
பிரதம நீதிபதி, சென்னை உயர் நீதிமன்றம்.

ஸ்ரீ எஸ். வான்ஹென்டன்,
பெல்ஜிய ஸ்தானிகாலயம், பம்பாய்.

ஸ்ரீ ஜார்ஜ் கிராம்பி,
பிரிட்டிஷ் அரசாங்க உதவி ஹைகமிஷனர், சென்னை.

ஸ்ரீ கே. பி. கெய்த்தான்,
உதவி தலைவர், இந்திய கண்காட்சிசாலை, கல்கத்தா.

பெருமக்களின் கருத்துரைகள்.

ஸ்ரீ ஸ்ரீபிரகாசா,

சென்னை ராஜ்ய கவர்னர், சேவாஸ்ரமம், காசி.

நம்முடைய பண்டைய, இடைக்கால அபூர்வ சிற்பங்கள் சிலவற்றை இங்கு நான் காணப்பெற்றேன். சிற்ப உருவங்கள் யாவும் அழகாக சீரிய முறையில் வைக்கப்பெற்றுள்ளன. நம் பழைய சிற்பச் செல்வங்களோடு நில்லாது, இக்காலக் கலைஞர்களும் தங்களால் இயன்றவரை கலைச் செல்வத்தைப் பெருக்கி வளம்படுத்த முயன்றிருப்பதைக் கண்டு மன மகிழ்ந்தேன். இன்னும் மக்கள் திரளாக வந்து இக்கலைக் கூடத்தைக்கண்டு இங்குள்ள கலைப்பொருள்கள் தரும் இன்பத்தையும் படைக்கும் ஆற்றலையும் பெற வேண்டும் என விரும்புகிறேன். இக்கலைக்கூடத்தைச்சுற்றி வானளாவி நிற்கும் கூட கோபுரங்களும், மாட மாளிகைகளும் இடைக்காலக் கட்டிடக் கலைஞர்களின் திறமைக்கு நிலைத்த சான்றாய் விளங்குகின்றன. சங்கீத மஹால் சிறந்த ஒலியமைப்பு வாய்ந்த நல்லதோர் அரங்கு ஆகும்.

சென்ற காலச்சிறப்பு நமக்கு ஊக்கம் அளித்துச் சிறந்ததோர் எதிர் காலத்தைத் தோற்றுவிக்க நமக்கு ஆற்றலை அளிக்குமாக.

ஸ்ரீமதி காமினி தேவி,

ராஜபவனம், கிண்டி.

செப்பாலும், கல்லாலும் ஆன அழகிய சிற்ப உருவங்களை யெல்லாம் ஒருசேரத் தொகுத்து வைத்திருப்பதானது ஒரு பெரிய காரியம். நம்முடைய பண்டையச் சிற்பங்களையெல்லாம் இவ்வாறு ஒரு கலையழகு தோன்றும் வண்ணம் அமைத்து, இடைக்கால மன்னர்கள் அமைத்த இவ்வாண்மனையைக் கலைக்கூடமாக ஆக்கியவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

ஸ்ரீ வி. வி. கிரி,

இந்திய அரசாங்கத் தொழில் அமைச்சர், புது டெல்லி.

இக்கலைக்கூடம் காண்பதற்குக் கவர்ச்சிகரமாகவும் அறிவூட்டுவதாகவும் இருக்கிறது. இக்கலைப் பொருள்களைக் காண்பதும் இவற்றை நுணுகி ஆராய்வதுமே சிறந்த கல்வி எனலாம். இக்கலைக்கூடத்தை உருவாக்கியவர்கள் அவர்கள் மேற்கொண்டுள்ள காரியத்தில் மேன்மேலும் வெற்றி பெறுக என வாழ்த்துகிறேன்.

ஸ்ரீமதி சாராவும், ஸ்ரீ கன்ராட் அவர்களும்,

அமெரிக்க ஸ்தானிகர் அலுவலகம், புதுடெல்லி.

இக்கலைக்கூடத்தைக் காணக்கிடைத்தமையை அரியதொரு வாய்ப்பு எனவே நாங்கள் கருதுகிறோம். அவசரமில்லாமல் அமைதியாக இதனை வந்து காணும் சந்தர்ப்பம் இனியும் எங்களுக்குக் கிடைக்கும் என நம்புகிறோம்.

ஸ்ரீ எம். வி. கிருஷ்ணப்பா,

உணவு, விவசாய உதவி மந்திரி, இந்திய அரசாங்கம்.

சிறந்த கலைப்பொருள்களை நல்ல முறையில் இங்கு வைத்திருப்பதைக் கண்டு பெரிதும் மகிழ்கிறேன். இக்கலைக் கூடத்தைக் காணும்பொழுது, நம்முடைய முன்னோர்கள் எத்தகைய கலைச்செல்வங்களை நமக்களித்துள்ளார்கள் என்பது விளங்கும். நம் முன்னோர்கள் கலைத்துறையில் எவ்வளவு சிறந்திருந்தார்கள்; இவ்வுலகில் மற்ற மக்கள் எல்லாம் நாகரிகமும் பண்பாடும் ஒரு சிறிதும் இல்லாது, அவற்றைப்பெற முயன்று கொண்டிருந்த அந்தக் காலத்திலேயே நம் முன்னோர்கள் எத்தகைய உயர்ந்த பண்பாட்டையும் நாகரிகத்தையும் பெற்றிருந்தார்கள் என்பனவெல்லாம் என் நினைவுக்கு வருகின்றன. இத்தகைய கலைப்பொருள்களை இக் கலைக்கூடத்தார் ஆர்வத்தோடு போற்றிப் பேணுகிறார்கள்.

ஒரு பாரிஸ் யாத்ரிகன்,

மிக அழகியது இக்கலைக்கூடம். இவ்வழகிய சிற்பங்கள் எப்போதுமே நம்மோடு இருக்கவேண்டும் என்ற ஆசை எழுகிறது. (மூலம் பிரஞ்சு மொழியில்.)

ஸ்ரீ டி. என். ராமச்சந்திரன்,

துணைத்தலைவர், புதைபொருள் ஆராய்ச்சி இலாகா, புதுடெல்லி.

இக்கலைக்கூடத்தைச் சுற்றிப் பார்த்த நேரம் முழுவதும் இன்பத்தையும் கிளர்ச்சியையுமே யான் பெற்றேன். இங்குள்ள சிற்பங்களைக் கண்டதன்மேல் நான் ஹிந்து சமய சிற்பக் கலை பற்றிய பல செய்திகளையறிந்து கொண்டேன். இக்கலைக் கூடத்தை உருவாக்கி இக்கலைப் பொருள்களை அணிபெற அமைத்தவர்களை நான் பாராட்டுகிறேன். இங்குள்ள சில புது பதுமைகள் நம் உள்ளத்தை கவரும் தன்மையன.

ஸ்ரீ தாதா தர்மசிகரி,

தந்தோலி, நாகபுரி, மத்ய பிரதேசம்.

இந்தக்கலைக்கூடத்திலுள்ள கவின்கலைப் பொருள்களைப் பார்த்த பிறகு இதை உருவாக்கியவர்கள் எவ்வளவு நல்ல ரசிகர்கள், கலாசார நுட்பங்களை எவ்வளவு நன்ருகப் புரிந்து கொண்டவர்கள் என்பது விளங்குகிறது. அகில் இந்திய சேவா சங்கக் காரியதரிசி ஸ்ரீ. வல்லபஸ்வாமி, ஸ்ரீமதி. விமலா தாய்தக்கர், ஸ்ரீமதி. சுகனிபேகன் ஆகியவர்களோடு இக்கலைக் கூடத்தைப் பார்த்தேன். இது, இன்பந்தருவதோடு, அறிவுக்கு விருந்தாகவும் இருக்கிறது.

ஸ்ரீமதி சார்லட் ரெயிக்மான்,

ஹாம்பர்க், ஏடி. யக்கர்ஸல்லா, 12, ஜர்மனி.

இக்கலைக்கூடத்தையும் இதில் உள்ள உயர்ந்த கலைப் பொருள்களையும் பார்த்து நான் பெரிதும் வியப்படைகிறேன். (மூலம் ஜெர்மன் மொழியில்.)

பேராசிரியர் ஜி. கே. எம். ......எஸ்டார்க்,

பெர்லின்.

பண்டைய சிற்பங்களைக் கண்டு பேரானந்தம் அடைந்தோம். இங்குள்ள சிறந்த சிற்பங்களில் ஒன்றையேனும் எங்கள் நாட்டுக்கு எடுத்துப் போவதற்கில்லையே என்று ஏங்குகிறேன். (மூலம் ஜெர்மன் மொழியில்.)

ஸ்ரீ ஏ. டி. வில்லனுய்சி,
94, அவின்யூ, ஹென்றி மார்டின், பாரிஸ்.

இங்குள்ள மிகச்சிறந்த கலைப்பொருள்களையும், அவற்றை அணிபெற அமைந்திருப்பதையும் கண்டு பேருவகையடைந்தேன் என்பதை மனமாரச் சொல்லுகிறேன். ஹிந்து சமயத்தின் ஆழ்ந்த கருத்துக்கள் கலையோடு எப்படி இயைந்திருக்கிறது என்பதை இந்த அழகிய கலைக்கூடத்திலே கண்டேன்.

ஸ்ரீ ஏர்னஸ்ட் குன்ஸ்,
சூரிச், சுவிட்ஸர்லாந்து.

பண்டைக்கால, இக்கால கலைப்பொருள்களை யெல்லாம் ஒருங்கே வைத்திருக்கும் இவ்வழகிய கலைக்கூடத்தைக் கண்டு நான் மிகவும் வியந்தேன். (மூலம் ஜெர்மன் மொழியில்.)

ஸ்ரீ எம். ஜி. பார்ன்ஸ்,
க்ளேர் கல்லூரி, கேம்ப்ரிட்ஜ்.

என்ன அற்புத திருவுருவங்கள் .... !

ஸ்ரீ இம்மானுவல்,
பிரஞ்சு கடற்படை உத்தியோகஸ்தர், பாரிஸ்.

இத்தென்னாட்டுச் சிற்ப உருவங்களைக் கண்டு அளவற்ற வியப்படைந்தேன். (மூலம் பிரஞ்சு மொழியில்.)

பேராசிரியர், ஜே. எல். டேவிட்ஸன்,
கலைப்பேராசிரியர், ஏல் பல்கலைக் கழகம்.

இவ்வழகிய கலைக்கூடத்தை இவ்வளவு சிறந்த முறையில் தொடங்கியவர்களை நான் பாராட்டுகிறேன்.

ஸ்ரீமதி ரூத் டாம்லின்ஸன்,
வொர்ஸ்டர், மசாச்சுஸட்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடு.

தஞ்சையில் இவ்வளவு அழகிய கலைக்கூடத்தைக் கண்டு நான் மிக மகிழ்ந்தேன்.

ஸ்ரீ டி. எப். ப்ரர்ன்ஸர்,
ஸ்விட்சர்லாந்திலிருந்து.

இக்காரியத்தை மேற்கொண்டு செய்து முடித்ததற்காக, இந்தப் புதிய கலைக்கூடக் கண்காணிப்பாளர்களையும் தஞ்சைப் பெருமக்களையும் நான் பாராட்டுகிறேன். கலை, கலாசாரங்களை யறிந்து கொள்வதற்காக இந்தியாவுக்கு வருகிறவர்கள் எல்லாம் தஞ்சையில் உள்ள இப்புதிய கலைக்கூடத்தையும் அதில் உள்ள அழகிய சிற்பங்களையும் காணத்தவறலாகாது.

ஸ்ரீ ஸி. மாக்ஸ்வெல் லெப்ராய்,

பர்மா என்ணெய் கம்பெனி லிமிடெட், ரங்கூன், பர்மா.

அழகுதோன்ற வைக்கப்பெற்றுள்ள இக்கவின்கலைச் செல்வங்கள் என் நெஞ்சில் இடம் பெற்றுவிட்டன. தொடங்கியவர்களுடைய பெருமையை இது எடுத்துக் காட்டுகிறது.

ஸ்ரீ கே. எஸ். பிள்ளையும் மற்றவர்களும்,

டர்பன், நெட்டால், தென் ஆப்பிரிக்கா.

தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்த யாத்ரீகர்களாகிய எங்களுக்கு இவ்வழகிய கலைக்கூடம் முழுவதையும் காட்டினார்கள். நமது இந்திய சகோதரர்கள் அமைத்துள்ள இவ்வளவு அழகிய கலைக்கூடத்தைக் கண்டு நாங்கள் மிக்க பெருமிதம் அடைந்தோம்.

ஸ்ரீ என். பத்மநாபன்,

தலைமை என்ஜினியர், மராமத்து இலாகா, சென்னை.

தஞ்சைக்கலைக்டரும் அவருடைய சகாக்களும் பெருமுயற்சி செய்து நம் நாட்டு அருங்கலைப் பொருள்களை நாம் எல்லாம் காண வைத்திருப்பது பெரிதும் போற்றுதற்குரியது. இத்தகையதொரு கலை விருந்தைச் சாதாரண மக்களும் பெறும் வண்ணம் செய்தமைக்கு அவர்களுக்கெல்லாம் நன்றி செலுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம்.

ஸ்ரீ எஸ். ஜி. நந்தி,

காஸிம்பஜார் மகாராஜ்குமாரும், பாதுராணியவர்களும்,
ஸ்ரீபூர் அரண்மனை, காசிம்பஜார்.

இக்கலைக்கூடத்தைச் சுற்றிப்பார்த்துக் கலைப்பொருள்களைத் தொகுத்து வைத்திருப்பதைப் பாராட்டி மகிழ்ந்தோம். உண்மையில் இக்கவின் பொருள்கள் எல்லாம் கலையார்வமாய்ச் சிக்குத்தகுந்தவையே. நாடெங்கும் இத்தகைய கலைக்கூடம் அமைக்க யாவரும் நல்ல முறையில் முயன்று, நாம் பழங் காலத்தில் பெற்று இருந்து இப்போது இழந்துவிட்ட கலையுணர்வை நாம் எல்லாம் மீண்டும் பெற்று உலகத்தார் முன்னிலையில் ஒரு தனிச்சிறப்பை எய்த வேண்டும் என்று விரும்புகிறேன்.

கலைக்கூடத்து



சிற்ப உருவங்கள்.

அனல் ஏந்தி ஆடும் பெருமான்

சூடுவேன் பூங்கொன்றை,
　　சூடிச் சிவன் திரள்தோள்
கூடுவேன், கூடி முயங்கி
　　மயங்கி நின்று
ஊடுவேன், செவ்வாய்க்கு
　　உருகுவேன், உள்உருகித்
தேடுவேன், அவன்அருளே
　　சிந்திப்பேன்
வாடுவேன், பேர்த்தும்
　　மலர்வேன், அனல் ஏந்தி
ஆடுவான் சேவடியே
　　பாடுதும்காண் அம்மானுய்

என்று பாடுகிறுர் மணிவாசகர்.

தக்கன் வேள்வி சிதைய, தாக்ஷாயணியைச் சுமந்து கொண்டு சிவபெருமான் அன்று சுடலையில் நடம் ஆடினுன் என்பர். ஆதிபரன் ஆட, அங்கைக்கனல் ஆடிற்று, ஓதும் சடையாடிற்று, பாதிமதி ஆடிற்று; எல்லாம் ஒரு உன்மத்த வெறியோடேயே ஆடிற்று. அப்படி அனல் கையேந்தி அழகன் ஆடிய அந்தி நிருத்தம் உருவாகிறது வர்ணத்திலே.

ஆடும் ஆட்டத்தைக் கண்டபின் — (படத்தில்த்தான்)
　　அழல் ஆடி அம்கை சிவந்ததோ?
　　அம்கை
　　அழகால் அழல் சிவந்த வாரோ?

என்று அந்த அரனிடமே கேட்கத் தோன்றுகிறது நமக்கு. கேள்விக்கு, அந்தப் பேயாடுகானில் பிறங்க அனல் ஏந்தி தீயாடுவான் பதில் சொல்கிறுனு? என்றுதான் பார்ப்போமே!

இந்த அமர ஓவியத்தைத் தீட்டியவர் அமரர் ஸ்ரீ V. துரைசாமி ஆச்சாரி. இதை நமக்கு உதவியவர் கலைமகள் காரியாலயத்தார். இருவருக்கும் நம் நன்றி.





நான்முகக் கடவுள்

நான்முகக் கடவுளான பிரம்மாவுக்கு கோயிலே கிடையாது இந்த நாட்டில் என்பர். மூன்று மூர்த்திகளும் இருப்பதாகக் கூறப்படும் அந்த உத்தமர் கோயிலிலேகூட பிரம்மாவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் ஒரு சிறிய இடம் தான். ஆனால் கலைக்கூடத்தாராகிய நாங்கள் அந்தப் பிரம்மாவிற்கு, அந்த சிருஷ்டிகர்த்தாவிற்கு அதிமுக்கியமான இடத்தைக் கொடுத்திருக்கிறோம். காரணம் அவர் செய்யும் சிருஷ்டித் தொழில் முக்கியம் என்பதற்காக அல்ல; எங்கள் கலைக் கூடத்தையே சிருஷ்டிசெய்ய அவர்தான் காரணபுருஷர் என் பதற்காகத்தான்.

கல்கத்தா புதைபொருள் இலாகா ஆராய்ச்சியாளர் தஞ்சை வந்து, கரந்தையில் ஆற்றங்கரையில் மண்ணில் அரைவாசி புதைந்துகிடந்த இவரைக் கல்கத்தாவிற்கே எடுத்துப்போக எண்ணினர். அதற்காக கலைக்டரை அணுகினர். ஆனால் கரந்தை மக்களோ 'எங்கள் பிரம்மாவை விடோம்' என்றனர். மண்ணில் புதைந்து கிடந்தவரை வெளியில் எடுத்து நீராட்டிப் பூமாலை புனைந்து ஏத்தத் துவங்கிவிட்டனர். இந்தக் கலை யழகுடைய சிலை கிடந்த நிலையைக் கண்டுதான் இத்தகைய சிலைகளையெல்லாம்ஒன்றாக ஓரிடத்தில்சேர்த்துவைத்தல் ஆகாதோ என்று எண்ணினோம். கரந்தை வாசிகளும் ஒத்துக்கொண்டனர். அழகு நடைபோட்டு அரண்மனைக்கு வந்தார் அவரும். வந்தது நல்ல முகூர்த்தத்தில்தான். அதனால்தான் இத்தனை சிற்ப உருவங்கள் சேர்ந்திருக்கின்றன இங்கே இன்று.

நல்ல கம்பீரமான தோற்றம்; எத்தனையோ வருஷ காலமாக யோகம் செய்து சித்திபெற்ற வாய்ப்பான உடல்; நிறைந்த சாந்தம் தவழும் நோக்கு எல்லாம் உடையவராய் இருக்கிறார் அவர். நான்கு முகத்திலும் நான்கு பாவம். இதை நன்றாக எல்லோரும் உணர்வதற்காக அவரைச் சுற்றிவந்து கண்டுகளிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம் இப்போது. கலைக் கூடத்திலே நுழைந்ததும் உங்கள் கண்முன்னே நிற்பவர் - இல்லை அழகான பதுமபீடத்தில் இருப்பவர் இவர்தான். இவருக்கு வணக்கம் செலுத்திவிட்டுத்தான் மேற்செல்லவேண்டும்.

நாரணர் திருமகன் நான்முகனே
ஆரணக் கலைகளின் ஆதிகர்த்தா

கலைகளின் கர்த்தாமாத்திரம் என்ன? கலைக்கூடத்தின் கர்த்தாவே அவர்தானே.

நர்த்தன விநாயகர்

கைலாயத்தில் ஒரு நாள் அன்னை பார்வதியும் பரமேஸ்வரனும் அமர்ந்திருக்கிறார்கள். இருவருக்கும் இடையில் இருக்கிறார் மூத்த பிள்ளை விநாயகர். தந்தையும் தாயும் மாறி மாறிப் பிள்ளையை முத்தமிட்டுக் கொஞ்சுகிறார்கள். ஒரு வேடிக்கை பண்ண நினைத்தார் பிள்ளையார். அன்னையும் அத்தனும் முத்தமிட விரும்பும் ஒரு நிலையிலே, தான் கொஞ்சம் பின்வாங்கிக் கொண்டார். அவ்வளவுதான் அன்னையும் ஐயனுமே முத்தமிட்டுக்கொண்டார்கள் ஒருவரை ஒருவர். இதைக்கண்டு, தன் திறமையைத்தானே வியந்து கைகொட்டிச் சிரித்தார் பிள்ளையார். இப்படி ஒரு கற்பனை கவிஞனுக்கு.

மும்மைப் புவனம் முழுதீன்ற முதல்வியொடும் விடைப்பாகன்
'அம்மை தருக முத்தம்' என அழைப்ப, ஆங்கே சிறிதகன்று
தம்மின் முத்தம் கொளநோக்கி சற்றே நகைக்கும் வேழமுகன்

என்பது பாட்டு. எத்தனைக் குறும்புக்காரப்பிள்ளை? அத்துடன் எவ்வளவு ஹாஸ்ய உணர்ச்சியுடைய புருஷன் இந்த விநாயகர் ஆம், அவருடைய உருவம், நடை, செயல் எல்லாவற்றிலுமே ஹாஸ்ய உணர்ச்சி நிறைந்து கிடக்கிறதே. அதிலும் அவர் நடனம் ஆட ஆரம்பித்து விட்டால் எவ்வளவு களிப்பு பார்ப்பவர்களுக்கு. களிப்புமட்டுந்தானா? ஒரு அற்புத உண்மையுமே உள்ளடங்கி இருக்கிறது இந்த நடனத் திரு உருவிலே. இந்தப் பூமியில்உள்ள எல்லா உயிர்களும் ஆட, மேருபர்வதம் போன்ற பெரிய பொருள்கள் எல்லாம் ஆட, விசாலமான ஆகாசத்தில் உள்ள அண்டங்கள் எல்லாமே ஆடுகிறது, நம் உள்ளத்தோடு உள்ளமாய் கலந்த விநாயகர் ஆடும்போது. அவரோ காமனை அதம்செய்த சிவபெருமான் பெற்றெடுத்தவர்; தும்பிக்கையுடையவர்; மத ஜலத்தை மழைபோல் கொட்டும் பேரண்டம் முழுவதும் விகசித்து நிற்கும் மாணிக்கம். இதனைச் சொல்கிறார் அதிரா அடிகள் ஒரு பாட்டில்.

நிலந்துளங்க, மேருத்துளங்க நெடுவான்
தலந்துளங்க சப்பாணி கொட்டும்—கலந்து உளங்கொள்
காமாரி ஈன்ற கருங்கைக் கடதடத்து
மாமாரி ஈன்ற மணி.

என்ன அற்புததத்துவம்! தத்துவம் விளங்கா விட்டாலும் ஹாஸ்ய நடனத்தைக் கண்டே சிரித்து மகிழலாம் தானே.


NARTHANA VINAYAGAR - DARASURAM
நர்த்தன விநாயகர் - தாராசுரம்
வியந்து கை துடிகொட்ட



திரிபுராந்தகர்

பொன் வெள்ளி இரும்பு ஆகிய மூன்று உலோகங்களினுல் மூன்று பறக்கும் உலகங்களைச் சமைத்துக்கொண்டு மூன்று அசுரர்கள் எல்லா உலகங்களையும் பயங்கரத்துக்கு உள்ளாக்குகிருர்கள். இவர்களது கொடுமை தாங்காமல் தேவர்களும் மனிதர்களும் சிவபெருமானிடம் சென்று முறையிடுகிருர்கள். சிவபெருமான் எல்லோருக்கும் அபயம் அளித்து திரிபுரத்து அசுரர்களைச் சம்ஹரிக்கப் புறப்படுகிருர். பூமியைத் தட்டாகவும், சூரிய சந்திரர்களை சக்கரங்களாகவும் வைத்து ரதத்தை அமைத்து நந்தி இழுக்க பிரம்மா சாரத்தியம் செய்கிருர். ஆனல் கடைசியில் இத்தனை சிரமமும் வேண்டியிருக்கவில்லை என்று தெரிகிறது. சிரித்தார் சிவன்; அவ்வளவுதான். வெந்து பிடி சாம்பலாகிவிட்டது திரிபுரங்கள் எல்லாம்: இது கதை.

கதைக்கு அடிப்படைதேட நெடுந்தூரம் செல்லவேண்டாம். காமம் வெகுளி மயக்கம் என்ற திரிபுரங்களின் ஆட்சியே எங்கும் நடக்கிறது. அதனல் கெட்டு அழிபவர் எத்தனை பேர். அத்தனை பேரையும் உய்விக்க, இந்தத் திரிபுரங்களை சுட்டெரித்துத்தானே ஆகவேண்டும். அப்படிச் சுட்டெரிப்பது யாரால், எப்படி சாத்தியமாகும்? இறைவன் ஒருவனலேதான் முடியும். உயிர்களைக் கொஞ்சம் ஆடி ஓடி விளையாடவிட்டுப் பின்னல் புன்னகை காட்டி, திரிபுர தகனம் நடத்தி தன்பக்கல் சேர்த்துக் கொள்ளும், கனிந்த அருளுடையவன் அல்லவா அவன். இதுதான் திரிபுர தகனத்தின் உட்கிடை.


இந்த உட்பொருளைத் தெரிந்திருக்கிருன் சிற்பி. தேரில்லாமல், சக்கரம் இல்லாமல், சாரதி இல்லாமல், ரிஷபம் இல்லாமலேயே சிரித்துப்புரம் எரிக்கக்கூடிய சேவகன் இறைவன் என்பதைக் காட்டியிருக்கிருன். நீண்ட வில்லை கையில்த்தாங்கி நிமிர்ந்த நோக்கோடு புன்னகை புரிந்து நிற்கிருன் கல்லுருவிலே. பார்த்தனுக்கு அருள்புரிய வந்த பசுபதியோ என்று மயங்குவாரும் உண்டு. ஆனல் அன்று அவன் வந்த நிலை வேடன் உருவத்தில் அல்லவா? வேடனுக்கு ஏது மணி மகுடமும் வாகுவலயமும்?

கஜசம்ஹாரர்

கலை உலகிலே மிகப்பிரசித்திபெற்ற சிற்பம் மேலை நாட்டிலே உள்ள லாவக்கூன். ஒரு தந்தையையும் அவன் மக்கள் இருவரையும் இரண்டு மலைப்பாம்புகள் சுற்றிக்கொள்ள, அந்தப்பிடியிலிருந்து மீள தந்தையும் மக்களும் திருகிக்கொண்டு தவிக்கிறார்கள். உண்மையிலேயே அற்புதமான கிரேக்க நாட்டுச் சிற்பம் அது. அத்துடன் மைக்கேல் ஆஞ்சலோ உருவாக்கிய புதன் Mercury என்ற சிலையில் உள்ள முறுக்கிய நிலையையும் பாராட்டாத மேல் நாட்டுக் கலைஞர்கள் இல்லை. ஆனால் இவர்கள் எல்லாம் இந்தக் கலைக்கூடத்திற்கு வந்து, இந்த கஜசம்ஹாரரை மட்டும் பார்த்து விட்டால் தாங்கள் போற்றும் சிற்ப வடிவங்கள் எல்லாம் இதற்கு ஈடாகுமா என்று எண்ணமாட்டார்களா? ஒரே சிலையில், ஒரு மூர்த்தியின் முன் பாகத்தையும் பின் பாகத்தையும் முறுக்கிக் காட்டும் ஆற்றல் பெற்றிருந்த சிற்பிகளுக்கு தலைவணங்காதிருப்பார்களா?

கதை தெரிந்தது தான். அறிவால் மாட்சி பெற்றிருந்த தாருகாவனத்து ரிஷிகளின் கர்வத்தை அடக்கப் புறப்படுகிறார் சிவபெருமான். அவர்களோ தங்கள் யாக பலத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். அதனால் ஆபிசார ஹோமம் நடத்துகிறார்கள். அதிலிருந்து எழுகின்றன பாம்பும் புலியும். பாம்பை எடுத்து மாலையாகப் போட்டுக்கொள்கிறார்; புலியை கிழித்து உடையாக அணிந்து கொள்கிறார். கடைசியில் பெரிய யானையையே ஏவுகிறார்கள் முனிவர்கள். யானையைச் சம்ஹரிப்பது என்பது எளிதான காரியமா? அதுவும் தன்னந்தனியனாக. ஆகவே ஆங்காரத்துடன் அந்த யானையின் உடலைக் கிழித்து, அதன் உடலுக்குள்ளேயே பாய்ந்து திருகிக்கொண்டு கஜசம்ஹாரத்தை நடத்தி முடிக்கிறார். இந்த நிலையை உருவாக்கிய சிற்பிகள் அநேகர்: திருத்தருப்பூண்டி, பேரூர் சிவன் கோயில்களில் எல்லாம் இந்தச் சிற்பம் உண்டு. ஆனால் இவைகள் எல்லாம் தோன்றுவதற்கு முன்னாலேயே தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயிலில் இந்த சிற்பம் மிகவும் அழகாக உருவாகி இருக்கிறது. உடலில் உள்ள திருகலும், முகத்தில் உள்ள ஆங்காரமும் அற்புதமாக இருக்கிறது. அஞ்சி ஒதுங்கும் பார்வதியையும், அவள் கையில் உள்ள முருகனையும் உருவாக்கியிருக்கிறான் சிற்பி. காணக்கண் கோடி வேண்டும். கோடிபோதுமா? நேரம் எவ்வளவு யுகங்கள் வேண்டுமோ?


DARASURAM
தாராசுரம்
போர்த்தவன் காண்



தக்ஷிணாமூர்த்தி

முனிவர்கள் கூட்டத்தில் நால்வர். இவர்கள் வேதம், சாஸ்திரம், கலைகள் எல்லாம் கற்றுத் தேர்ந்தவர்கள். நான்மறை ஆறங்கம் முதல் கற்ற கேள்வியெல்லாம் வல்லார்கள் என்றாலும், மயக்கம் தீர்ந்தவர்கள் இல்லை. மயக்கம் தீர்வதற்கு உபதேசம் பெற இறைவனை அணுகினார்கள். அவரும் சரியென்று கல் ஆலமரத்தடிக்கு எல்லோரையும் கூட்டிச்சென்றார். பக்கத்தில் இருத்தினார் எல்லோரையும். இவர் தம் நடுவிலே இருந்தார் அவரும் மௌனமாக. கையால் சின்முத்திரையை மட்டும் காட்டினார். அவ்வளவுதான் மயக்கம் தெளிந்து விட்டது முனிவர்களுக்கு. 'இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி' சொல்லாமல் சொல்லிவிட்டார் சொல்ல வேண்டியது அத்தனையையும். அவ்வளவு பேரும் அப்படியே இருந்து விட்டார்கள், இல்லை—இன்னும் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

அன்று ஆலின்கீழ் இருந்து அறம் சொன்னான் அவன் என்பார். என்னதான் சொன்னான் அவன்? இயல்பாகவே பாசங்களில் நின்று நீங்கிய பதியாகிய இறைவனை, உயிராகி பசு சென்று சேர்ந்தால், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலமும் தானே அகன்று விடாதா? இதைத்தானே கூறுகிறது சின்முத்திரை. இந்த உண்மையைத்தானே விளக்குகிறார் திருமூலர்.

பதிபசு பாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப் போல் பாசம் அநாதி
பதியினைச் சென்றணுகாப் பசு பாசம்;
பதி அணுகில் பசு பாசம் நில்லாவே என்று.

இந்த தக்ஷிணாமூர்த்தியை—தென்முகக் கடவுளை தெற்கே பார்த்த மூர்த்தியாகவே வைத்திருக்கிறார்கள் கலைக்கூடத்தில். சின்முத்திரை காட்டும் கை கூட முறிந்து போய் இருக்கிறது. முத்திரை இல்லாமல் முகத்தாலேயே அருள்புரியும் ஆற்றல் பெற்றவர்தானே அவர்: 'சொல்லரிய நெறியை ஒரு சொல்லால் உணர்த்தி சொரூபானுபூதிகாட்டும் சின்மயானந்த குரு' அவர் என்று கண்டு தெளிவது நமக்கு எளிதுதான்.

வீணாதர தக்ஷிணாமூர்த்தி


தக்ஷிணா மூர்த்தத்தில் எத்தனையோ வகை, யோக தக்ஷிணா மூர்த்தி, வீணாதர தக்ஷிணாமூர்த்தி என்றெல்லாம். கலைக் கூடத்தில் தக்ஷிணாமூர்த்தியும், யோக தக்ஷிணாமூர்த்தியும் கல் லுருவில் இருக்க, வீணாதரர் மட்டும் செப்பு உருவிலே உருவாகி இருக்கிறார்.

இறைவனே இசை வடிவினன். ஏழிசையாய் இசைப் பயனாய் இருப்பவன் அவன். தும்புரு நாரதர் சுகர் முதலியவர் களுக்குக்கூட இசையைக் கற்பித்தவன், சாமவேதத்தை வீணையில் ஏற்றிப் பாடி. இப்படி இறைவன் தன் கையில் வீணையேந்தி வாசித்ததைக் கற்பனை பண்ணியிருக்கிறார் ஞானசம்பந்தர். வேயுறு தோளிபங்கனைகவும், விடமுண்ட கண்டனைகவும் உள்ளவரே மிக நல்ல வீணை தடவி இன்னிசை பொழிகிறார் என்பார். ஓசை ஒலியெலாம் தானே ஆன அவன், வீணாதரனாக காட்சி கொடுப்பதும் பொருத்தம் தானே.

என் இவன் வீணை வாசிக்கிறான்? சொல்லால், முத்திரையால் விளக்க முடியாததையும் விளக்கும் ஆற்றல் இந்த இசைக்கு உண்டு என்றுதானா? துடிமுழக்கி, தன்பக்கம் உயிர்களை சேர்க்க முயன்றிருக்கிறான். நடம் ஆடி உயிர்களுக்கு ஒரு ஆசை ஊட்டியிருக்கிறான். மேலும் வீணை வாசித்து அந்த நாத வெள்ளத்திலே மிதக்கப்பண்ணி பவமாகிய கடலைக்கடக்க உதவி யிருக்கிறான், எல்லாம் உயிர்கள்மாட்டுக் கொண்ட அபரிமிதமான கருணையால்த்தான்.

கலைக்கூடத்தில் உள்ள செப்புச் சிலையை திரிபுராந்தகரோ என்று மயங்கியவர்கள் உண்டு. வீணையேந்தும் கரத்திற்கும், வில்லேந்தும் கரத்திற்கும் உள்ள வேற்றுமையை மட்டும் உணரும் ஆற்றல்பெற்றிருந்தால், இந்தமயக்கம் வேண்டியதில்லை. அத்துடன், இந்த முயலகன் இருக்கிறானே அவன், நடனராஜன் காலடியிலும் தென்முகக் கடவுள் காலடியிலும் மட்டுந்தான் கிடப்பான். திரிபுராந்தகரைக் கண்டு அஞ்சமாட்டான், அவர் காலடியில் அகப்படமாட்டான். இதை வைத்தும் இவர் வீணாதரரே என்று அறுதியிட்டுவிடலாம்தானே. நல்ல சோழர் காலத்துச் செப்பு விக்ரஹம். மிக்க அழகோடு அமைந்தது.





சிவ பார்வதி

கைலைக்கு இந்தப் பூத உடலோடேயே செல்லவேண்டும் என்று ஆசைப்படுகிறார் அப்பர். அதற்காக, இறைவன் கட்டளைப்படி ஐயாறப்பன் கோயிலில் உள்ள குளத்தில் முழுகி எழுகிறார். கைலை காட்சியே கிடைக்கிறது. தான்பெற்ற அனுபவத்தைச் சொல்கிறார்:

காதல் மடப்பிடியோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்

என்று. ஏதோ களிறும் பிடியும், குயிலும் பெடையும், சேர்ந்து வரும் தோற்றம் எல்லாம் சிவனும் சக்தியுமாகத் தோன்றுகிறது அவருக்கு.

சேர்ந்து வருவது என்றால், இருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் விலகி, அகல நடந்து, அழுத்தலாகவா வருகிறார்கள்? ஒருவரை ஒருவர் தழுவி, நெருக்கி உட்புகுந்தவர் போல் அல்லவா வருகிறார்கள்; களித்துக் கலந்ததோர் காதல் கசிவுடன் அல்லவா வருகிறார்கள். அவனை இடித்துக்கொண்டு அம்மை வருகிறதைக் கண்டால், இவள் அவன்றன் இடப்பாகத்தில் பாதியைப் பெறுவதற்கு முன்னிருந்த நிலையோ என்று கேட்கத் தோன்று கிறது நமக்கு. இத்தனையும் தோன்றுகிறது சிவபார்வதி சிலையிலே.

இந்தச் சிற்பம் உருவான கதை இதுதான். சிற்பி உண்மையில் முதலில், இருவரையும் சேர்த்து உருவாக்க எண்ண இல்லை. சந்திரசேகரரைத்தான் உருவாக்க எண்ணியிருக்கிறான். கல்லில் உருவை வரைந்து வலப்பக்கத்தை செதுக்கி வேண்டாத பகுதிகளை வெட்டியெடுத்திருக்கிறான். இடப்பக்கத்தில் வெட்டிச் செதுக்கவேண்டிய பகுதி அதிகம் இருப்பதைக் கண்டவுடனே, அந்தச் சிறு இடத்தில் என் பார்வதியையும் சேர்த்து உருவாக்கி விடக்கூடாது என்று நினைத்திருக்கிறான். சிற்றுளி வேலை செய்திருக்கிறது. ஆனால் இருக்கும் இடத்திற்குள்ளேயே சமாளிக்க பார்வதியை நெருக்கியிருக்கிறான். சிவபெருமானைச் சுற்றித் தழுவும் ஒரு கொடியாக அவளை ஆக்கியிருக்கிறான். இப்படித் தழுவும் கொடியையும், கொடியை அணைத்துக் கொள்ளும் கொம்பையும் கண்டால்,

மஞ்சிடை வயங்கித் தோன்றும்
பவளத்தின் வல்லி அன்ன
குஞ்சரம் அனைய வீரன்
குவவுத்தோள் தழுவிக் கொண்டாள்

என்ற கம்பர் பாடல் ஞாபகத்திற்கு வராமல் போகுமா?

மன்மதன் — ரதி

பார்வதராஜன் புத்திரியை பரமேஸ்வரனுடன் சேர்க்கும் முயற்சியில் வெற்றிகண்டவன் **மன்மதன்,** இந்த முயற்சியில் தான் அழிந்து போனாலும்கூட, காமனை வெல்வது கடவுளுக்குமே சாத்தியமில்லை என்ற நிலை ஏற்பட்டு விடுகிறது அதனால்.

அன்றுதான் பிறக்கிறது கவிதையும் காவியமும், இசையும் நடனமும், சித்திரமும் சிற்பமும். காதல் என்ற பொருள் இல்லா விட்டால் இந்த உலகமே சூன்யமாகப் போய்விடாதா? காமன் என்பவன் இல்லாவிட்டால் காதலாவது கத்தரிக்காயாவது.?

ஆனால் என்ன அதிசயம். இப்படிக் காதலை வளர்க்கும் காமனையே மயக்குகிறாள் ரதி. இனி இருவரும் சேர்ந்து புறப்பட்டு விட்டாலோ, அதிலும் தேரில் ஏறி யுத்த சன்னத்தர்களாய் புறப்பட்டு விட்டாலோ கேட்கவே வேண்டாம்?

காதற் கடவுள் காமனுமே
காதலி ரதியுடன் தேரேறி
காதலை வளர்க்க விரைகின்றான்
இனி
வேதனை உறுபவர் எத்தனையோ?


என்றுதானே பாடுகிறார் இன்றைய கவிஞர். கரும்பை வில்லாகவும், வரிவண்டுகளை நாணாகவும், மலர்களை அம்பு களாகவும், பெண்களையே பரிவாரமாகவும், குயிலை ஊதுகாள மாகவும், கடலை முரசாகவும், வைத்துக்கொண்டு தென்றல்த் தேரில் ஏறிப்புறப்பட்டு விட்டால், வெற்றி நிச்சயம் என்று சொல்லவா வேண்டும்?

உருவிலி அவனே இந்த
உலகை வென்று ஒருவன் ஆவான்

என்று அதிவீரராம பாண்டியன் பாடுவது வியப்பில்லைதானே!

கலைக்கூடத்தில் உள்ள சிற்பங்களில் உருவத்தால் சிறியது இந்த மன்மதன் ரதி போர்க்கோலம். ஆனால், அன்பை வளர்க்கும் ஆற்றல் நிறைந்த அழகால் உயர்ந்தது. உயர்ந்ததைக் காணும் ஆவல் உங்கள் உள்ளங்களில் துடிப்பது எனக்குத் தெரிகிறது. நான் இன்னும் இடைநின்று தடுப்பானேன்.


MANMATHA — RATHI
மன்மதன் — ரதி



ரிஷி பத்தினிகள்

கலைஞனுக்கு தன் கற்பனையை வெளியிட இந்த இந்தப் பொருள்தான் வேண்டும் என்று இல்லை.

வண்டி அற்புதப் பொருளாம்—வண்டி
மாடும் அற்புதப் பொருளாம்
வண்டி பூட்டும் கயிறும்—என்றன்
மனதிற்கு அற்புதப் பொருளாம்

என்று அவன் சொல்வதில் வியப்பில்லைதான்.

என்றாலும், கலைஞன் வளர்த்தது காதலையும் வீரத்தையும், போற்றியது பெண்ணையும் அவள் அழகையும். பெண்களும் காதலும் இல்லாவிட்டால் இவர்கள் கற்பனையெல்லாம் சிறகடித்துப் பறக்க முடியுமா என்ன! இப்படிப்பட்ட கலைஞன் ஒருவனுக்கு ஒரு கதை கிடைக்கிறது ஒரு புராணத்திலே, தாருகாவனத்தில் அற்புத சுந்தரனாக வந்த அந்த பிக்ஷாடனரது அழகிலே அங்குள்ள ரிஷி பத்தினிகள் மயங்கி நிறை யழிந்தனர் என்று. வளை கழன்றது சிலருக்கு; உடை நெகிழ்ந்தது பலருக்கு; நாணம் வந்தது நங்கைக்கு; மலர்ப்பாணம் தைத்தது மங்கைக்கு; என்றெல்லாம் தோன்றிற்று இவனுக்கு. 'சொல் நலம் கடந்த காமச் சுவையை பல் உருவம் ஆக்கி, இந்நலம் தெரிய வல்லார் எழுதியது என்ன நிற்கும்.' இவர்தம் நிலையெல்லாம் கல்லிலே உருப்பெறுகிறது பின்னால். இவர்களில் ஒருத்தியின் உடை நெகிழ்கிறது; தன்னையும் தாங்கலாத அவள் துயில் ஒன்றும் தாங்கி நிற்க அரும்பாடு படுகிறாள். ஒசிந்த நோக்கோடும், முகிழ்த்த மூரலொடும் நாணி நிற்கிறாள் ஒருத்தி; தன் நாணத்தை மறைக்க, நாணிக்கோணும் இவள் பின்னால் மறைகிறாள் மற்றொருத்தி. இருவரையும் உருவாக்குகிறான் சிற்பி. இருவரது அழகையும், இவர்களைச் சேர்ந்த இன்னும் ஐந்து ரிஷி பத்தினிகளின் நிலையையும் காண்பதற்கு நேரே கலைக்கூடம் செல்லுங்கள் இன்றே, என்று சொல்லுவதைத்தவிர வேறு சொல்ல என்னால் இயலவில்லை.

பிக்ஷாடனர் — கங்காளர்


பிறப்பு இறப்பு இல்லாத சிவபெருமான் தான் எத்தனை எத்தனை மூர்த்திகரமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறான்? அவனா வெளிப்படுத்திக் கொள்கிறான்? அவன் உருவைக்காணத் துடிக்கும் சிந்தனைச் சிற்பிகள் வெளிப்படுத்த முயலுகிறார்கள். அவ்வளவுதான்.


ஆடவல்லானாக, கயிலாயநாதனாக; பால்வண்ண மேனியனாக, 'பசுபதியாக, உமாமகேசுவரனாக, ஆபத்சகாயனாக எல்லாம் பாராட்டப்பெறும் பரமேஸ்வரனை, பிறைசூடும் சடை மேலோர் புனலும் சூடி, அனல்கொண்டு அந்திவாய் வண்ணங் கொண்டு, பலியேற்கும் பெருமானாகவும்' கற்பனை பண்ணியிருக் கிறார்கள். அவன் கேட்கும் பலி, அன்பும் ஆணவமும் என்றும் குறித்திருக்கிறார்கள். அதற்காக கதை கட்டியிருக்கிறார்கள்.

தாருகாவனத்து ரிஷிகளின் கர்வத்தை அடக்க சிவபெருமான் பிக்ஷாடனர் உருவில் வந்தார் என்பது கதை. அவர்தன் மேனி அழகில் மயங்கி ரிஷிபத்தினிகள் எல்லாம் நிறையழிந்தனர் என்பது கற்பனை. அந்தக்கதைக்கும் கற்பனைக்கும் வடிவம் கொடுத்திருக்கிறான் சிற்பி. வருகிறவன் உள்ளிருப்பவர்களை யெல்லாம் வெளியில் இழுக்க தன் டமருகத்தை கொட்டி முழக்கி ஒலித்துக்கொண்டே வருகின்றான். அவன்றன் அழகிய உருவைக்கண்டு ரிஷி பத்தினிகள் மயங்கினார்களோ இல்லையோ. கவிஞன் மையலாகி நிற்கிறான். வருகின்றவன் வடிவழகை, அப்படியே சொல்லிச் சொல்லி மகிழ்கிறான், நல்ல பாட்டிலே.

அடியில் தொடுத்த பாதுகையும்
அசைந்த நடையும் இசைமிடறும்
வடிவில் சிறப்ப நடந்தருளி
மழை ஏந்தி மருங்கணைந்த
தொடியில் பொலிதோள் முனிமகளிர்
சுரமங்கையரை மயல்பூட்டி
படியிட்டு எழுதாப் பேரழகால்
பலிதேர் பகவன் திரு உருவம்.

பாட்டிற்கு விளக்கம் தேவை இல்லை. கலைக்கூடத்தின் சிறப்பை யெல்லாம் தன்புகழாக்கிக் கொள்ளும் இவனைக் கண்டால் அவனே விளக்கம் கூறுவான்.





நடராஜர்

இறைவனைக் காணும் ஆசை அன்று முதல் இன்று வரை எத்தனையோ உள்ளங்களில் உண்டாகி இருக்கிறது. ஆனால் அந்த ஆசை பரிபூரணமாக நிறைவேறிற்று என்று சொல்லக் கூடியவர்கள் இல்லைதான். இல்லாவிட்டால்

எவ்வுருவோ நும்பிரான்
என்பார்கட்கு என்றுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது ?

என்று அவனிடமே கேட்பாரா காரைக்கால் அம்மையார்? அதனால்தானே, இப்படியன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக்காட்ட ஒண்ணாதே என்று கையை விரித்து விடுகிறார் அப்பரும்.

ஆனால் இந்த உருவம் இல்லாத இறைவனுக்கும் உருவத்தைக் கற்பித்து அந்தக் கற்பனையில் முழுக்க முழுக்க வெற்றிகண்டவன் தமிழனே. விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் விளங்கு ஒளியாய் நின்ற அந்த ஒரு தனி முதல்வனை ஒவ்வொரு அணுவிலும் இயங்கும் ஒரு அற்புத சக்தியாகக் காண்கிறான். அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது என்றும் உணர்கிறான். அணுவுக்குள் அணுவாய் நின்று அதனை மட்டும் என்ன. அண்டங்களையே ஆட்டுவிக்கிறான் என்பதை அறுதியிட்டு உரைக்கிறான். அப்படி ஆட்டுவிக்கிறவன் தானும் ஆடிக் கொண்டேதான் ஆட்டுவிக்க இயலும் என்று முடிவுகட்டுகிறான். இப்படித்தான் ஆடும் பெருமான் கலைஞனது கற்பனையில் உதித்திருக்கிறான். கலைஞன் முதல்முதல் கண்ட கடவுளின் திருவுருவமாக நடனராஜன் உருவாக்கப் பட்டிருக்கிறான். சாஸ்திரம், சமயம், கலை எல்லாம் ஒன்றாய் இணைவது இந்த உருவத்தில்த்தான் என்று ஆனந்த குமாரசாமியும் கட்டியம் கூறுகிறார். குனித்த புருவத்தையும் குமிண் சிரிப்பையும் விரித்த சடையையும் பவள மேனியையும் எடுத்த பொற் பாதத்தையும் உருவாக்கிய இந்தத் திருவுருவிலே அமைந்த அந்த அபய கரத்திலேயும் ஒரு குறிப்பை வைக்கிறான். 'என்று வந்தாய்?' என்று பரிவோடு கேட்கும் தோரணையில் அந்தக்கை அமைந்திருக்கிறது. கேள்விக்கு விடை சொல்ல முடியுமா நம்மால், நாம் இருக்கிற பரவச நிலையில்?


சக்கரத்தாழ்வார்

ஆழ்வார்கள் பன்னிருவர் என்பது பிரசித்தம். இவர்களோடு பதின்மூன்றாவதாக நிற்பவர் சக்கரத்தாழ்வார். கருடாழ்வார், கம்பநாட்டாழ்வார் என்றெல்லாம் கூடவே சேர்த்துக்கொண்டே போகலாம், ஆழ்வார்கள் தொகையைப் பெருக்க.

ஆனால் இந்தச் சக்கரத்தாழ்வார், ஏதோ மனித உருத்தாங்கியவர் அல்ல. ஆறு கோணவடிவமும் அந்த வடிவத்தை தாங்கும் ஒரு சக்கரமும் அற்புத சக்தி வாய்ந்தவை என்பர். அந்த சக்கரம் அளவில்லாத ஆற்றல் உடையது; ஆழி வண்ணன் கையில் அமர்ந்து அன்பர்கட்கு அருள்புரிய வல்லது; அதைப்போலவே பகைவரை வென்று முடிக்கும் திறலும் உடையது, என்றெல்லாம் பாராட்டப்படுகிறது. இத்தகைய அற்புத சக்தி உடைய அந்தச்சக்கரத்தையே, அக்கினிப் பிழம்பான ஒரு வீர புருஷனாகக் கற்பனை பண்ணி, அவன் கரங்கள் பதினாறில், பதினாறு ஆயுதங்களையும் கொடுத்து போருக்கும் எழும் ஆவேசத்தோடு அவனை நிறுத்தி உருவம் சமைத்திருக்கிறான் கலைஞன்.

அந்த உருவமே அடுத்தப் பக்கத்தில்.


சக்கரத்தாழ்வார்
(மன்னார்குடி)



மகாவிஷ்ணு — மணிக்குடி

பண்டைத் தமிழ் நாட்டிலே சைவ வைணவச் சண்டை பலமாக இருந்ததோ அல்லது இந்தக் கவிஞர்கள்தாம் தம் கற்பனையால் இந்த வேற்றுமையை ஏசலிலும் பூசலிலும் வளர்த்து விட்டார்களோ! எப்படி இருந்தாலும், உண்மையான பக்தர்கள் இந்த வேற்றுமையை அதிகம் வளர்க்கவில்லை.

கருது செம்பொனின் அம்பலத்தினில் நின்று நடிக்கும் கடவுளையும், காவிரித்திருநதியிலே துயிலும் கருணை மாமுகிலையும் ஒரு உருவிலே காண்பார்கள்; ஒரு கோயிலிலே பிரதிஷ்டை செய்வார்கள்; ஒரு பாட்டிலே பாடி பரவசம் அடைவார்கள்.

தாள் சடையும், நீள் முடியும்
ஒண் மழுவும் சக்கரமும்
சூழ் அரவும் பொன் நாணும்
தோன்றுமால்—சூழும்
திரண்டு அருவிபாயும்
திருமலை மேல் எந்தைக்கு
இரண்டு உருவம் ஒன்ருய்
இசைந்து

என்று பாடும் பேயாழ்வார்தான் எவ்வளவு சமரச மனப்பான்மை உடையவர்! இதே உணர்ச்சியைத்தானே வெளியிடுகிருர் ‘அரியலால் தேவி இல்லை ஐயன் ஐயாறனுர்க்கே’ என்று அப்பர் பெருமான்.

இந்த எண்ணங்கள் தாம் நம் சிந்தனையில் எழும், அந்த மணிக்குடியில் இருந்துவந்து கலைக்கூடத்தில் எழுந்தருளியிருக்கும் இந்த ‘மல்லார்ந்த திண்தோள் மணிவண்ணன்’ உருவைக் கண்டால். இந்தச் சிலையை உதவியவர் சைவம் வளர்க்கும், தருமபுரம் ஆதீனத்தார் என்றும் தெரிந்து கொண்டால், இன்னும் உயருவான் இவன் நம் சிந்தையிலே.

நல்ல கம்பீரமான உருவம்; இருந்த திருக்கோலம். இவனது உருவிலே, திருக்காண்போம்; பொன்மேனி காண்போம்; அருக்கன் அணிநிறமும் காணபோம்; பொன் ஆழியும் புரிசங்கமும் காண்போம். கண்டு மகிழுவோம். அவற்றிற்கெல்லாம் பல்லாண்டு பாடுவோம்.

நீலமேனி நெடியோன்

பகை அணங்கு ஆழியும் பால் வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையில் ஏந்தி
நலம் கிளர் ஆரம் மார்பில் பூண்டு
பொலம்பூ ஆடையில் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணத்தை

அன்று பாடினர், அந்த இளங்கோ அடிகள். அந்த 'நீலமேனி நெடியோன்' இன்று திருக்காறைவாயிலில் இருந்து அடிபெயர்ந்து கால் கடுக்க நடந்து வந்து, கலைக்கூடத்தில் நின்று கொண்டிருக்கிறான்.

இவன்தன் வடிவை உருவாக்க நல்ல நீல நிறமுடைய கல்லையே தேர்ந்தெடுத்திருக்கிறான் சிற்பி. இந்தத் திருவுருவம், காண்பவர் கண்ணையும் கருத்தையும் கவரும் அழகுடன் விளங்குகின்றது. அவர் அணிந்திருக்கும் கோல மாமணி ஆரமும், முத்துத்தாமமும், முடிவில்லதோர் எழிலோடு கூடிய நீலமேனியும், திருப்பாணாழ்வார் நெஞ்சினை மட்டுந்தானா நிறைகொண்டது, நம் நெஞ்சையுந்தான்.

அவர் வலது கையில் ஏந்தியிருப்பது பிரயோக சக்கரம், மிக்க வல்லமை உடையது; அடியும் படி கடக்கிறது; தோள்கள் திசை மேல் செல்கிறது; முடியும் விசும்பளக்கிறது இந்தத் திரு உருவில். நீண்டு நிமிர்ந்த கிரீடம், அவனை ராஜாதி ராஜனாக, தேவாதி தேவனாகக் காட்டுகிறது. முடி அற்புதமான பெருமையை வெளியிடுவதுபோல், தாழ்ந்தவர், வீழ்ந்தவர், ஏழையர், ஏதிலர் வரை நீண்டு தாழும் அடிகளும் அவன்றன் அற்புத எளிமையை விளக்குகின்றன. இன்னும் எவ்வளவோ சொல்லலாம் இந்தத்திரு உருவைப்பற்றி. என்றாலும் பேசுவார் எவ்வளவு பேசுவார் அவ்வளவு தானே அவன் ஓங்கி உயர முடியும். அதற்கும் அப்பாற்பட்டவன் அல்லவோ அவன்.


MAHAVISHNU – TIRUKKARA


TANJORE

கங்காதரர்

ரகு வம்சத்தில் தோன்றிய சகரர் அஸ்வமேத யாகம் செய்தனர். யாக மண்டபத்தில் இருந்த குதிரை ஒரு முனிவரது பர்ணசாலை அருகில் தங்கியிருந்தது. முனிவர்தான் குதிரையை நிறுத்தியிருக்கிறார் என்று வெகுண்டனர் மன்னனின் மக்கள். முனிவரது கோபாக்கினியால் வெந்து பொடி சாம்பலாகி விட்டனர். இவர்கள் உய்ய, கங்கையே இவ்வுலகத்திற்கு வர வேண்டியிருந்தது. பகீரதன் தவம் பண்ணினான். கங்கை பாய்ந்து பெருக இசைந்தாள். அவள் வரவை ஏற்க சடை விரித்து நின்றான் சிவபெருமான். மிக்க கர்வத்தோடு விண்ணிலிருந்து குதித்தவளை தன் சடா மகுடத்திலேயே அடக்கி விட்டான் இறைவன். பின்னர் பகீரதன் தவத்திற்கு மெச்சி ஏழுகூறாக, கங்கை பிரவஹிக்க அனுமதித்தான். இதுதான் கங்கை பாய்ந்து பெருகிய கதை.

இந்தக் கதையில் முளைத்தது இன்னொரு கற்பனை. சடா மகுடத்தில் கங்கையை வைத்துக்கொண்டார் என்பதற்காக, பார்வதி ஊடிக்கொண்டாள் இறைவனுடன். இன்று வந்தவளுக்காக என்றும் உள்ளவளை ஊடி வருந்தவிடுவாரா அவர். உடனே அவள்தன் பக்கல்சென்று அன்போடு ஆரத்தழுவி, நாடியைத் தாங்கி பிணக்கைத் தீர்க்கிறார் அவர். புலவியும் தீர்கிறது அதனால்.

இந்த புலவி தீர்க்கும் கங்காதரனை உருவாக்கியவர்கள் எத்தனை எத்தனையோ பேர். திருச்சி மலைக்கோட்டையில் பல்லவ மகேந்திரவர்மன் உருவாக்கிய கங்காதரர் பக்கத்தில் பார்வதியையே காணோம். ஆனால் சோழ மன்னர் கட்டிய கோயில்கள் பலவற்றில் இந்த கங்காதரர் அற்புதமாக உருவாகி இருக்கிறார். கோபமும், நாணமும் கலந்து உறவாடுகிறது பார்வதியின் உள்ளத்தில். யாவர்க்கும் வணங்காத புலியின் அதள் உடையவனான சிவபெருமானே, இந்த மெலிந்த இடையையும், தடித்த முலையையும், வேய்த் தோளையும் உடைய பார்வதியின் புலவிதீர்க்க, எவ்வளவு வணங்க வேண்டுமோ அவ்வளவு வணங்க முற்பட்டுவிடுகிறான்.

வெல்க புலவி. வாழ்க கலை.

நாராயணி

அன்னை பார்வதிக்குத்தான் எத்தனை எத்தனை அழகான பெயர்கள், இந்தச் சோழவள நாட்டில் உள்ள கோயில்களில். வாள் நெடுங்கண்ணி, காவியங்கண்ணி, வண்டு அமர்பூங்குழலி, ஏலவார் குழலி, கரும்படு சொல்லி, பந்தாடு நாயகி, திரிபுரசுந்தரி, பெரிய நாயகி என்ற பெயர்களையெல்லாம் சொல்லும்போதே நாவில் தேன் ஊறுகிறதே.

இத்தகைய அன்னையைத்தான் சாந்த நிலையில் மலை மகளாகவும், அலைமகளாகவும், கலைமகளாகவும் உருவாக்கி இருக்கின்றனர் கலைஞர்கள். அவளேதான் பயங்கர நிலையில், துர்க்கையாகவும், பைரவியாகவும், மகிஷமர்த்தனியாகவும் உருவெடுக்கிறாள். இரண்டு நிலைக்கும் இடையிலே, பர்வதராஜன் புத்திரி, பரமேஸ்வரன் மனைவி, பரந்தாமனின் தங்கை நாராயணியாகவும் காட்சி கொடுக்கிறாள். அந்தக் கோலத்தைத் தான் பார்க்கிறீர்கள் பக்கத்திலே, சங்கு சக்கர மேந்திய கையளாய், நல்ல தவக்கோலத்தில், நிறைந்த அமைதியில் நிற்கும் இவளை உருவாக்கச் சிற்பி எத்தனை நாள் தவங்கிடந்தானோ.

சிற்பவடிவங்களுக்கு எல்லாம் அழகு கொடுக்கும் திரிபங்கி நிலையில் இந்தச்சிலை அமையாவிட்டாலும், நல்ல அற்புத அழகோடு உருவாகி இருக்கிறாள். நீண்டுயர்ந்த மணிமகுடம் தலையை அலங்கரிக்க, முத்தாரங்கள் தோளில்புரள, இடையிலே மேகலைகள் ஒலிக்கின்றன. 'அழகெல்லாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்ற வல்லார்?' என்று கவிசக்கரவர்த்தி கம்பன் பாடிய பாட்டிற்கு எடுத்துக்காட்டாக நிற்கிறாள் இந்தத்தேவி.





கலியாணசுந்தரர்
திருமணக்கோலம்
திருவெண்காட்டில்
புதைந்து கிடந்தவை

கல்யாண சுந்தரர் - திருவெண்காடு

தஞ்சையில் கலைக்கூடம் நிறுவிய பின், தஞ்சை ஜில்லாவில் பல கிராமங்களில் மண்ணுக்குள் மண்ணாய் மறைந்து கிடந்த சிலா உருவங்கள் பல வெளிவர ஆரம்பித்திருக்கின்றன. அப்படி வெளிவந்தவைகளில் சிறந்த சிற்பச் செல்வந்தான் திருவெண் காட்டிலிருந்து கிடைத்த செப்பு விக்ரஹங்கள் எட்டு. அவை களில் நான்கு ஒரு நல்ல அமைப்பிலே இருக்கின்றன :

'தென்பால் உகந்தாடும்
தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்த' கதை

பிரசித்தமான தொன்றுதான். மலையரையன் மகளான பார்வதி இறைவனையே நாயகனாக அடையத் தவங்கிடக்கிறாள். அவள் தன் அன்பின் ஆழத்தைச் சோதிக்கவேண்டி இறைவனே விருத்த வேதியன் வடிவில்த்தோன்றி அவள் மனதைக் கலைக்க முயல் கிறான். ஆனால் அந்த முயற்சியில் அவன் தோற்கிறான்; அவள் வெற்றிபெறுகிறாள். பின்னால் சிவபார்வதி திருமணம் நடக்கிறது. மணக்கோலத்தில் இருக்கும் மணமக்கள் நிரம்ப அழகு வாய்ந்த வர்களாக இருக்கிறார்கள். மணமகளின் கரத்தை மணமகன் கொஞ்சம் அழுத்தமாகவே பற்றுகிறார்; மிடுக்காகவே நடக் கிறார். பார்வதியோ, நாணிக் கோணிப் பின் தொடர்கிறாள். தங்கைக்கு ஏற்ற மணவாளன் கிடைத்துவிட்டான் என்ற பெருமிதம் தோன்ற மகாவிஷ்ணு கொஞ்சம் எட்டியே நிற்கிறார். மணமகள் தோழியாக ஸ்ரீதேவி, மணமகளை இடதுகையால் பரிவுடன் தாங்குவதோடு வலதுகையாலும் அணைத்து அழைத்துச் செல்கிறாள். புதுமணத் தம்பதிகளை நேராக நோக்கினால் மேலும் நாணுவாளே மங்கை என்று எண்ணி அவர்களைப் பாராதது போலவே முகத்தைத் திருப்பிக்கொள்கிறாள் ஒருபுறமாக.

என்ன அற்புத நாடகம் - சிலை உருவிலே; அதுவும் செப்பு விக்ரஹ வடிவிலே ?

ரிஷபதேவர் - திருவெண்காடு

திருவெண்காடு, சீகாழிக்குத் தென் கிழக்கில் எழு எட்டு மைல் தூரத்தில் உள்ள சிறிய ஊர். அங்கு கோயில் கொண்டிருக்கும் வெண்காடர், அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவராலும் பாடப் பெற்றவர். இந்த வெண்காடரைவிடப் புகழ் பெற்றவர் அங்குள்ள அகோரசிவம். இவர்களுக்கு மேல் எல்லாம் பிரசித்தி பெற்றவை கோயில் பிரகாரத்தில் இருக்கும் சோம சூர்ய அக்கினி தீர்த்தங்கள்.

இந்தத் திருவெண்காட்டின் பெருமை இன்னும் உயர்ந்திருக்கிறது கலை உலகிலே, அங்கிருந்த அற்புதமான சிலைகள் வெளிவந்த காரணமாக. வெளிப்பட்ட சிலைகள் எட்டு. அவைகளில் சிறந்தவை ரிஷபதேவரும் அவர் துணைவி உமையுந்தான். கடகரியும் பரிமாவும், தேரும் உகந்து எருது இடபம் உகந்து ஏறியவன் அல்லவா அவன்: சிலையில் ரிஷபம் இல்லைதான் என்றாலும், அது இல்லை என்ற உணர்ச்சியே நமக்கு உண்டாவதில்லை. ரிஷபம் இருந்தால், அதன்மேல் இவன் சாய்ந்து நின்றால் எப்படி இருப்பானோ அப்படியே நிற்கிறான். நீண்டு உயர்ந்த வடிவம், அற்புதமான சடை அலங்காரம், அந்தச்சடைகளோடு படங்குறைந்த பாம்புகள் சுற்றிக் கிடக்கும் நேர்த்தி எல்லாம் கண்டு கண்டு அனுபவிக்கத் தகுந்தவை.

ரிஷபதேவர் பக்கத்தில் அவருடைய துணைவி உமையும் மிக்க அழகோடு நிற்கிறாள். அவள் நிற்கின்ற நிலையிலே ஒரு ஒயிலைக் காணலாம். 'காற்றிலேறி விண்ணையும் சாடுவோம் காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே' என்றான் பாரதி. அப்படியே எருதேறி விண்ணில் பறக்கவிரைகிறான் விடைப் பாகன், இந்த அம்மையின் கடைக்கண் நோக்கிற்குப் பாத்திரம் ஆகி.

அற்புதமான சிலைகள், கலைக்கூடத்தின் அழகையே அதிகமாக்கியிருக்கிறது.


ரிஷபதேவர்



துவாரபாலகர் — வெற்றிச் சின்னம்

தமிழர்கள் எப்போதும் பெருமையாகப் பேசுவது வட நாட்டரசரை இவர்கள் வெற்றிகொண்டதைத்தான். சோழன் கரிகாலன் இமயத்தில் புலிக்கொடி நாட்டினன் என்பர். சேரன் செங்குட்டுவன் கனக விஜயரைச் சிறை செய்தான் என்பர். கங்கை வரை சென்று வெற்றி கண்டவனை கங்கை கொண்டான் என்று போற்றிப் புகழ்வர். என்றாலும், இந்த வடக்கு தெற்கு என்ற வேற்றுமை கலை உலகிலே இருந்ததாகச் சரித்திரம் கூற இல்லை. கனக விஜயரை வெற்றி கண்டவன், கண்ணகி தேவிக்கு உருவச்சிலை அமைக்க, இமயத்திலிருந்து தான் கல்லைப் பெயர்த்திருக்கிறான், கங்கையில் நீராட்டியிருக்கிறான். கலைகளின் பெருங்கடல் கடந்த கல்வியான், தென்சொல் கடந்திருக்கிறான், வடசொல் கலைக்கு எல்லை தேர்ந்திருக்கிறான்.

இவர்கள் தன் அடிச்சுவட்டிலேதான் அமரன் ராஜேந்திரன் மகன் விஜய ராஜேந்திரன் என்னும் இரண்டாம் ராஜராஜன் வடநாடு நோக்கிப் படையெடுத்து, மேலைச் சாளுக்கியரது நகரமாகிய கல்யாணபுரத்தை முற்றுகையிட்டிருக்கிறான். முற்றுகையில் வெற்றி கண்டவனையும் வெற்றி கண்டிருக்கிறது அங்குள்ள சிலை ஒன்று. சிலை அழகில் மயங்கியவன், மற்றவர்களைச் சிறை செய்ய மறந்திருக்கிறான். சிலையை மட்டும் சிறை படுத்தி தன் ராஜதானி நகருக்கே கொண்டு வந்திருக்கிறான் அப்படிக் கொண்டுவரப்பட்ட சிலைதான் துவாரபாலகர் சிலை.

இத்தனையும் என் கற்பனை அல்ல. தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயிலில் உள்ள கல்வெட்டுத்தான் கூறுகிறது. 'கல்யாணபுரம் எறிந்து உடையார் விஜய ராஜேந்திர தேவர் கொண்டுவந்த துவாரபாலகர்' என்று சிலையின் அடியிலும் பொறிக்கப் பட்டிருக்கிறது என்கிறார்கள்.

சிலையின் அழகை நான் விவரிக்க விரும்பவில்லை நேரில்தான் பார்க்கலாமே நீங்கள். சாளுக்கிய சிற்பத்திற்கும், சோழர் சிற்பத்திற்கும் வேற்றுமை அதிகம் இல்லை என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அத்துடன் உள்ளே வாருங்கள் என்று சொல்லும் பாவனையில் கை அமைந்திருப்பதை மட்டும் காணத்தவறாதீர்கள்.

ராஜராஜனும் — அவன் துணைவியும்

மேலைச் சாளுக்கியரை வெற்றிகண்டு, கல்யாணபுரத்தில் இருந்து துவாரபாலகர் சிலையைக் கொண்டுவந்தவன் விஜய ராஜேந்திர சோழன் என்னும் இரண்டாம் ராஜராஜன். வெற்றி வீரனான இவன் அழகனாகவும் இருக்க வேண்டும் என்று தான் நினைப்போம் நாம்.

ஆனால் என்ன ஏமாற்றம்! தாராசுரத்துக் கோயிலிலே, 'இவன்தான் அவன், இவள்தான் அவன் மனைவி' என்று இரண்டு சிலைகளை அங்குள்ளவர் சுட்டிக் காட்டியபோது, சிலையில் உள்ள மன்னனும் மனைவியும், அழகுள்ளவர்களாக இல்லை. ஏன் இவர்கள் இப்படி கட்டுக்குட்டென்று அழகில்லாத வர்களாக இருக்கிறார்கள்?

ஆம்; உண்மை விளங்குகிறது நமக்கு. கலை ஆர்வம் மிக்குடைய மன்னன், நாட்டில் உள்ள சிறந்த சிற்பிகளை யெல்லாம் வரவழைத்து சிற்ப உருவங்களைச் செதுக்கச் சொல்கிறான். சிற்றுளியால், பிக்ஷாடனர், ரிஷிபத்தினிகள், கஜ சம்ஹாரர், திரிபுராந்தகர் எல்லாம் உருவாகிறார்கள் நல்ல கலை அழகோடு. அப்போது ஒரு சிற்பி ஆசைப்படுகிறான், மன்னனையே உருவாக்க வேண்டும் என்று. மன்னன் அந்தச் சிறந்த சிற்பியை நோக்கி 'நீ உருவாக்க வேண்டியது என்னை யல்ல. என் உருவம் செய்வதற்கு ஒரு கற்றுக்குட்டி போதும்' என்று சொல்லி விடுகிறான். மன்னன் கட்டளைப்படியே ஒரு கற்றுக்குட்டி உருவாக்கிய சிலைகள்தாம், இந்த மன்னனும் மனைவியும். கலாரஸிகனான மன்னன், இந்தச்சிலைகளும் அங்கே நிற்க அனுமதித்திருக்கிறான். காரணம், இந்த சிலைகளின் பகைப் புலத்தில் மற்றச் சிலைகளின் அழகு உயர்ந்து ஓங்கும் அல்லவா என்று.

என்ன! நான் சொல்வது சரிதானே?





விஜயராகவ நாயக்கர்

தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர் பரம்பரையில் கடைசி மன்னர். தஞ்சையில் இருக்கும் அரண்மனைக்கட்டிடங்கள், மதில் சுவர்கள் பலவற்றையும் கட்டியவர் இவர்தான். மாயூரத்தில் உள்ள புஷ்ய மண்டபத்தையும், திருவிடைமருதூரில் வீரசோழன் ஆற்றங் கரையில் அழகான மண்டபத்தையும் கட்டி இருக்கிறார். மன்னார்குடி ராஜகோபாலனுக்கு சுற்றுப்பிரகாரங்கள் அமைத்திருக்கிறார். தஞ்சையிலிருந்தே, அந்தக் காவிரித் திருநதியிலே துயிலும் ஸ்ரீரங்கநாதனைத் தொழ பன்னிரண்டு அடுக்கு மாடிகள் கட்டியிருக்கிறார்.

கட்டிடங்கள் கட்டுவதில் மாத்திரம் வல்லவர் இவர் என்பதில்லை. தன் தந்தை ரகுநாத நாயக்கரது வெற்றிகளை ரகுநாத அபியுதயம் என்ற அற்புதமான காவியமாகத் தெலுங்கில் உருவாக்கி இருக்கிறார். அந்த நூலில்த்தான், தஞ்சை சங்கீதமஹால் அமைத்த சேவப்ப நாயக்கர் புகழ் பரக்கப் பேசப்படுகிறது.

சிறந்த அமைச்சரான கோவிந்ததீக்ஷிதருடைய துணையோடு நாட்டில் அமைதி நிலவ மிகவும் பாடுபட்டிருக்கிறார். என்றாலும் கடைசியில் மதுரைச் சொக்கநாத நாயக்கருடன் ஏற்ற போரில், மகன் மன்னாருதாசனுடன் வீரசுவர்க்கம் எய்தியிருக்கிறார்.


இவருடைய சிலா உருவம் இன்று இருக்கிறது கலைக் கூடத்திலே. கூப்பிய கையராய் நின்று உங்களை வாயில் முகப்பிலேயே வரவேற்பவர் இவர்தான். கட்டுமஸ்தான உடலோடும் வீரக் கழல் அணிந்த காலோடும் பரம பாகவதர் அணியும் குல்லாவோடும் உருவாகி இருக்கிறார் நல்ல செப்பு விக்ரஹமாக.

சரபோஜி மன்னன்

சோழர்களும், நாயக்கர்களும் ஆண்ட இந்தத் தஞ்சையைப் பின்னர் மராத்திய மன்னர்கள் ஆண்டுவந்திருக்கிருர்கள். அஞ்சாத வீரன் அந்த சிவாஜியின் கால்வழி வந்தவர்கள், நல்ல வீரர்களாக இருந்ததில் வியப்பில்லை. தஞ்சை ஜில்லா முழுவதும், தர்மஸ்தாபனங்கள் நிறுவியதிலும் வியப்பில்லை. இந்தப் பரம்பரையில்தான், கலை வளர்க்கும் காவலனுக சரபோஜி மன்னன் தோன்றியிருக்கிருன். துளஜா மகாராஜாவின் ஸ்வீகார புத்திரனுக வந்தவர், தமிழ்நாட்டுக் கலைச் செல்வங்களின் ஸ்வீகாரத் தந்தையாக அமைந்திருக்கிருர். ஆங்கில அன்பர்களின் கூட்டுறவால் எண்ணற்ற பாஷைகளைக் கற்றிருக்கிருர். மேல் நாட்டுக் கலையையும் கீழ் நாட்டுக் கலாசாரத்தையும் இணைத்து ஒரு விசுவவித்யாலயத்தையே உருவாக்க எண்ணியிருக்கிருர். அதற்கு ஒரு முதல் முயற்சி, உலகில் உள்ள அரிய புத்தகங்களையும், தமிழ்நாட்டுச் சுவடிகளையும் சேர்த்திருக்கிருர். இவற்றையெல்லாம் பதனமாகப் பாதுகாத்து சரஸ்வதி மஹாலை நிறுவியிருக்கிருர். சரஸ்வதி மஹாலில், என்ன என்ன இருக்கிறது என்று சொல்வதைவிட, அங்குஎன்ன என்ன இல்லை என்றுசொல்வது எளிது. அங்கு இல்லாதன இல்லை என்று சொன்னுல் அது மிகை ஆகாது.

இவருடைய அரிய சேவையைப் பாராட்டி 'உமக்கு ஒரு சிலை நிறுவ நினைக்கிரோம்' என்று அந்த ஆங்கில அதிகாரிகள் சொன்னபோது, "செய்யுங்கள், ஆனுல் என்னைக் கூப்பிய கையனுய் நான் வணங்கிய கலைமகளை நோக்கித் தவங்கிடக்கும் நிலையில் ஆக்கி வையுங்கள்.'' என்று சொன்னுராம். அந்த நிலையிலேதான், நல்ல சலவைக் கல்லுருவில் கலைக்கூடத்தின் பிரதானபகுதியிலே நின்றுகொண்டிருக்கிருர் இன்றும்.





காவல் கூடம் — தஞ்சை

தஞ்சையில் பெரு உடையார் கோயில் விமானம் தக்ஷிண மேரு வானுற ஓங்கி நிமிர்ந்து நிற்கிறது. அதனுடன் போட்டி போட்டு விண்நோக்கி விரைந்தெழுவது போன்று உயர்ந்துள்ளது தான் காவற்கூடக் கோபுரம். இந்தக் கோபுரத்தின் அடித்தளத்தில்த்தான் கலைக்கூடம் அமைந்திருக்கிறது.

ஏதோ அந்தக் காலத்தில் பகைவர்கள் வருவதைக் கண்காணிக்க காவல்கூடம் வேண்டியிருந்தது. வீரர்கள் தங்குவதற்கு வசதியாகவும், பகைவர்கள் உள் புகுந்தால், அவர்களோடு தம்மீது வடுப்படாமலேயே போராடுவதற்கு உரிய நிலைகளையும் ஏற்படுத்தினர்கள் நாயக்க மன்னர்கள். இத்தகைய நிலைகளை உள்ளடக்கி வெளியில் அதை அழகான கோபுரமாக்கிக் காட்டினர் கலை அழகு உணர்ந்திருந்த காரணத்தால். அந்தக் கலைக்கூடத்துக் கோபுரத்தின் அழகை எத்தனையோ கோணங்களில் இருந்து பார்க்கலாம், கலைக்கூடத்திற்குள் நுழைந்தால்.

★

ஏனைய

சிற்ப வடிவங்கள்.

★


மதுரை மீனுக்ஷி அம்மன் கோயில்

விண்மறைக்கும் கோபுரங்களைத் தாங்கிய விணமறைக்கும் கோயில்கள் தமிழ் நாட்டில் பிரசித்தம். மலையைக் குடைந்து குகைக் கோயில்களை சிருஷ்டித்தான் **மஹேந்திரவர்மன்** என்ருல், அவன் மகன் **மாமல்லன்** பாறைகளையே வெட்டிச் செதுக்கி கற்கோயில்களை உருவாக்கியிருக்கிருன், பாலாற்றின் மருங்கிலே.

காவிரிக் கரையிலோ சோழ மன்னர்கள் முழுக்க முழுக்க கல்லாலேயே கட்டியிருக்கிருர்கள் கோயில்களை. நீண்டு நிமிர்ந்த விமானங்களையும், அழகொழுகும் சிலைகளையும் உருவாக்கியவர்கள் இவர்களே. தஞ்சைப் பெருஉடையார் கோயில், கங்கை கொண்ட சோழீச்சுரம், தாராசுரத்து ஐராவதேஸ்வரர் கோயில் எல்லாம் இன்றும் தமிழ் நாட்டில் பிரசித்தம்.

என்ருலும், நாடுமுழுவதையும், கோயில்களாலும் கோபுரங் களாலும் நிறைத்த பெருமைக்கு உரியவர்கள் நாயக்க மன்னர்கள் தான். அந்த நாயக்க மன்னர்கள் கட்டிய கோயில் களில் எல்லாம் சிறந்தது மதுரை மீனுக்ஷி கோயில். நகர அமைப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் மதுரையம்பதியிலே, நகரின் நடுநாயகமாக அமைந்துள்ள கோயிலின் நான்கு வாயில் களிலும் நான்கு கோபுரங்கள் வானளாவி ஓங்கியிருக்கின்றன. அதிலும் அந்தத் தெற்கு வாயில் கோபுரம் இருக்கிறதே அது அளவில் குறையாமல் கூடாமல் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கிறது. கல்லால் இழைத்த கவிதையோ என்னும்படி, அதைக்கட்டிய சிற்பிகளின் பெருமையைப் பறைசாற்றுகிறது. அந்தக் கோபுரத்தின் தோற்றம்தான் பக்கத்தில் இருப்பது.





ஆனந்தத் தாண்டவம்.

மாடம் பாவ்லோவா என்ற ரஷ்யநாட்டு அம்மையார் பல நடனத் தோற்றங்களில் மேடைமீது காட்சி அளித்தார். கடைசியாக ஒரு அற்புதமான நடனத்தை ஆடி, ஆட்டத்திற்கு முத்தாய்ப்பு வைத்தார். இந்த நடனத்தைக் கண்டுகளித்த ஒரு ரஸிகருக்கு, கடைசியாக ஆடிய ஆட்டத்தின் பொருள் விளங்க வில்லை. அரங்கத்தின் மீதே ஏறி, அம்மையாரைச் சந்தித்து, 'அம்மையே, தாங்கள் ஆடிய அந்தக் கடைசி நடனத்தின் பொருள் என்ன?' என்று கேட்டார். அதற்கு பாவ்லோவா அம்மையார் சொன்னபதில் இதுதான். 'அப்படி அந்த நடனத்தின் பொருளை விளக்கி நான் வார்த்தைகளில் சொல்லக்கூடுமானல், நான் நடனமே ஆடி இருக்கவேண்டாமே?' (If I could say that in words, I need not have danced it)

உண்மைதான், வெறும் வார்த்தைகளினலே விஷயத்தைச் சொல்லிவிட முடியும் என்றல் அதை நடனமாடிக் காண்பிப்பானேன்? சொல்லால் விளக்க முடியாத ஒரு அற்புத தத்துவத்தைத்தான், நடராஜரது நடனம் விளக்குகிறது நமக்கு.

'வான் நின்று இழிந்து வரம்பு இகந்த மாபூதத்தின் வைப்பு எங்கும் ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும்' இயங்குகின்றன் இறைவன். அணுவிற்குள் அணுவாக நின்று ஆடுகிறன், அணுவிற்கு வெளியே இருந்து அதனை ஆட்டுகிறன். அணுவின் ஊனுக இருந்து உடலைத் தாங்குகிறன். உயிராக இருந்து ஊக்குகிறன்; உணர்வாக இருந்து ஆட்டுகிறன். ஆம், கயிறு இல்லாமலேயே, இந்த அண்ட பம்பரங்களை ஆட்டத் தெரிந்தவன் அவன். ஆட்டுவிக்கின்றவனும் ஆடிக்கொண்டே தான் ஆட்டுகிறன். அவன் ஆடிக்கொண்டே ஆட்டினுல்த்தான் அண்டங்கள் ஆடும். இப்படியெல்லாம் சிந்திக்கிறர்கள் கலைஞர்கள். 'ஒருநாமம், ஓர் உருவம், ஒன்றும் இல்லாத' அந்த இறைவனை ஆடும் பெருமானுக உருவாக்கி இருக்கிறர்கள்; அதைச் சித்திரத்தில் தீட்டியிருக்கிறர்கள், உலோகத்தில் வார்த்திருக்கிறர்கள். அப்படி வார்க்கப்பட்ட ஆனந்த நடனத் திரு உருவம்தான் பக்கத்தில் இருப்பது. இந்தச் சிலா உருவத்தின் உயரம், திருவாசி உள்பட எட்டு அடி. தமிழ்நாட்டு நடராஜத் திருஉருவங்களில் எல்லாம் சிறந்தது; உயர்ந்தது. கலா ரஸிகர்கள் கண்டு காணவேண்டியது ஒன்று. காணவேண்டுமானல் கும்பகோணத்தை அடுத்த கோனேரிராஜபுரம் போய் ஆகவேண்டும்.

கல்யாண சுந்தரர் — வேள்விக்குடி

மலையரையன் பொற்பாவை
வாள் நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டவனுடைய


பெருமையை, மணிவாசகர் பாடுகிறார். அப்படி உலகறியத் தீவேளாது ஒழிந்தனனேல், உலகனைத்தும், கலை நவின்ற பொருள்கள் எல்லாம் கலங்கிடும் என்றும் உரைத்து விட்டார் அவர். நானும் சொல்லுவேன், 'இந்தக் கல்யாண சுந்தரர் திரு உருவம் ஒன்று, சிற்பக்கலை உருவிலே தோன்றாது இருந்து விட்டால், இந்தக்கலை வாழ்ந்ததிலேயே பயனில்லை' என்று. அவ்வளவு அற்புதமான திருவுருவம் அது.

ஒரு அரச குமாரனுக்கு ஒரு அரசிளங்குமரி மணம் செய்ய நிச்சயிக்கப் படுகிறாள். திருமணம் நடப்பதற்கு முன்னமேயே, பெண்ணின் தாய் தந்தையர் இறந்து விடுகின்றனர். நடக்க இருந்த திருமணம் அதனால் தடைப்படுகிறது. அங்கு எழுந்தருளி வேள்வி நடத்தி, திருமணத்தை நடத்திக் கொடுத்தார் இறைவன் என்பது கதை. திருமண வேள்வி நடத்திய இடம் வேள்விக்குடி என்று பெயர் பெறுகிறது. மற்றொரு திருமணத்தை நடத்த வந்தவர் தானும் திருமணக்கோலத்திலேயே வந்திருக்கிறார், என்று தெரிந்து கொள்ளலாம் நாம்.

வேள்விக்குடி, குத்தாலத்திற்கு பக்கத்தில் உள்ள சிறிய ஊர். வேள்விக்குடி விளக்குடியாக இன்று மாறி இருக்கிறது. அங்குள்ள கோயிலில் இருக்கிறார் கல்யாண சுந்தரர். சுந்தரருக்கு ஏற்ற பரிமள சுகந்த நாயகியும் பக்கத்தில் நிற்கிறாள்.

புது மணப் பெண்ணின் நாணம் முழுவதையும் ஒவ்வொரு அங்கத்திலும் வடித்தெடுத்திருக்கிறான் சிற்பி. உள்ளத்தினுள்ளே எழும் மகிழ்ச்சி, அதை வெளிக்காட்டாதிருக்க அவள் செய்யும் முயற்சி, இந்த இரண்டு செயலுக்கும் இடையிலே வெளிப்படும் உணர்ச்சியாம் நாணம் இங்கே உயிர்பெறுகிறது. இப்படிப் பட்ட அழகியை, நாணி நடக்கும் நங்கையைப் பெற்றவர், ஒரு மிடுக்கு நடை போடுவதில் வியப்பில்லை தானே!





சண்டிகேசர் அனுக்ரஹமூர்த்தி

ஸ்ரீவபூசைக்கு இடையூறு செய்தார் என்பதற்காக தன் தந்தையின் காலையே துணித்தவருக்கு, சண்டீச பதம் தந்து மாலை சூட்டி அனுக்ரஹித்தார் சிவபெருமான் என்பது கதை.

சண்டீசனும் ஆம் பதம் தந்தோம்
என்று அங்கு அவர் பொன் தடமுடிக்கு
துண்டமதி சேர் சடைக் கொன்றை
மாலை வாங்கி சூட்டினர்

என்று இதையே பாடினர் சேக்கிழார் பெரியபுராணத்தில். தான் உண்டதையும், உடுத்ததையும், சூடுவதையுமே சண்டீசனுக்கு தந்து களித்தார் சிவபெருமான் என்பதுதான் எவ்வளவு பொருள் பொதிந்தது. இந்த நிலையைத்தான் கல்லால் இழைத்த காவியமாக உருவாக்கியிருக்கிறான், ராஜராஜன் மகன் ஆன ராஜேந்திரன், அவன் கட்டிய கங்கை கொண்ட சோழீச்சுரத்திலே. தந்தையை விஞ்சும் தநயனை இந்த கங்கை கொண்ட சோழன், தநயனை பாராட்டி மலர்சூட்டி மகிழும் தந்தையை உருவாக்கிக் காட்டியதில் வியப்பில்லைதானே.

அலகில் கலையின் பொருட்கு எல்லை ஆடுங்கழலே என்றெண்ணி, வழிபட்டவரை நிரந்தரமாகத் தன் திருவடிக்கீழ் அழைத்து அவருக்குத்தான் தன் தலையில் அணிந்திருந்த கொன்றை மாலையையே எடுத்து அணிவித்து கவுரவிக்கிறார். கல்லில் உருவாகி இருக்கும் சண்டிகேசர் அவ்வளவு சிறந்த சிற்பம் அல்லதான். என்றாலும் அந்தத் தொடுத்த இதழிசூழ் சடையுடைய சிவபெருமானது உருவம் மிகச்சிறந்த உருவம் என்பதில் ஐயம் இல்லை. நல்ல உடல் அமைப்பும், நீண்டு உயர்ந்த கிரீடம் அணிந்த திருமுகமும், காதில் இலங்கும் குழையும், சுருள் தோடும், கையில் ஏந்திய மானும் மழுவும் அந்த அண்டர்பிரானை நல்ல அழகனாக்கி இருக்கிறது. அழகனுக்கு ஏற்ற அழகியாகப் பார்வதி தேவியும் ஏதோ கிடைத்த அந்தச் சிறு இடத்திலே நெருக்கி உட்புகுதரு நிலையில் அமர்ந்திருக்கிறாள் அங்கு நடக்கும் இந்த முடி சூட்டு விழாவினைக் காண்பதற்கென்றே ஒரு நடை போகலாம் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு. புறப்படுகிறீர்களா?

ஞான சரஸ்வதி.

கோது அகன்ற தொழில் உடைத்தாகி
குலவு சித்திரம், கோபுரம் கோயில்
ஈது அனைத்தின் எழிலுடை உற்ருள்
இன்பமே வடிவு ஆகிடப் பெற்ருள்

என்று சரஸ்வதி தேவியைப் பாடுகிருர், மகாகவி பாரதியார். கலைவளர்க்கும் கோயில்களில் கலைமகளுக்கு இடம் இல்லாது போகுமா? கலைக்கூடத்திலும் 'தெள்ளுகலைத்தமிழ் வாணி' நின்ற திருக்கோலத்தில் இரண்டு மூன்றிடங்களில் நின்றுகொண்டிருக்கிருர், தன் துணைவர் நான்முகனுடன்.

ஒட்டக்கூத்தர் வணங்கிய சரஸ்வதி இருக்கிருள், நன்னிலத்திற்கும் பேரளத்திற்கும் இடையேயுள்ள கூத்தனூரில். இந்தக் கலைமகள் நல்ல கலை உருவாக அமையவில்லை. கலை அழகோடு கூடிய கலைமகளைக்காண, கங்கை கொண்ட சோழபுரமே போக வேண்டியது தான். அங்கு தெற்குப் பிரகாரத்தில் அந்தராளத்திற்கு ஏறும் படி வழி ஏறினல் கிழக்கே பார்த்த நிலையில் ஞான சரஸ்வதி உட்கார்ந்திருப்பாள். நல்ல கம்பீரமான உருவம் என்ருலும், அமைதி நிலவும், அந்த சாந்த சொரூபத்திலே. நீண்டு உயர்ந்த மணிமகுடம் தலையை அலங்கரிக்க, அக்க மாலையும் கலசமும் ஏந்திய கையளாய், வெள்ளைத்தாமரையில் அவள் வீற்றிருக்கின்ற திருக்கோலம், காணும் அன்பர் கண்ணுக்கும் கருத்துக்கும் பெருவிருந்தாய் இருக்கும். Bas relief என்னும் உப்புச உருவில் அமைந்த சிலையானதால் வலது கைகளில் தாழ்ந்த கை மிகவும் குறுகியது போல் தோன்றும். என்ருலும், 'ஒன்றென்று இரு தெய்வம் உண்டென்று இரு' என்று சொல்லும் பாவனையில், ஒற்றைவிரல் காட்டி அறிவுறுத்துகிருள் அவள் என்று எண்ணத் தோன்றுகிறது எனக்கு. நீங்கள் சென்ருலும், இன்னும் எத்தனையோ சிந்தனைகளைத் தூண்டுவாள் அவள்.





பிக்ஷாடனர் - வழூவூர்

தாருகாவனத்து ரிஷிகள் வேதம் ஓதி, யாகம்செய்து, சிறந்த அறிவையும், பெறுதற்கரிய சித்திகளையும் கைவரப் பெற்றனர். அறிவோடு வளர்ந்தது ஆணவமும். தம்மை ஒப்பாரும் தமக்கு மிக்காரும் இல்லை என்ற கர்வமும் மிகுந்தது. இந்தக் கர்வத்தை அடக்கப் புறப்பட்டனர் சிவபெருமானும், விஷ்ணுவும். ஆடை யணியாத அழகனாக, பிக்ஷைப் பாத்திரம் ஏந்திப் புறப்பட்டார் சிவபெருமான். இவரது அழகில் மயங்கி நிறை அழிந்தனர் ரிஷி பத்தினிகள். காண்பவரை மயக்கும் மோகினியாக வந்தார் மகாவிஷ்ணு. அவரைப் பின் தொடர்ந்தார்கள் முனிபுங்கவர் எல்லாம்.

இப்படி ஒரு கதை. இப்படி உருவான சிவனுடைய மூர்த்தத்தைத்தான் — பிக்ஷாடனர் என்று கூறுகின்றோம் நாம். எல்லாம்வல்ல இறைவனை, வேண்டுவார் வேண்டுவன எல்லாம் வரையாது வழங்கிடும் வள்ளலை, கலைஞர் கற்பனை பண்ணுகிறார் பிச்சைக்காரனாக; என்ன அற்புதமான கற்பனை என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் அவன்கேட்கும் பிச்சை, நம்மிடம் உள்ள அன்பையும், ஆணவத்தையுமே என்றுமட்டும் உணர்ந்து விட்டால் எவ்வளவு உயர்ந்துவிடுகிறான் அவன் நம் சிந்தையிலே.

அரை நிர்வாணப் பக்கிரியாகக்கூட இல்லாமல் முழுக்க முழுக்க நிர்வாண நிலையிலே அவன் அழகனாக உருவாகி இருக்கிறான். ஏதோ பலி கேட்கும் நிலையில் இருக்கிறான் என்றாலும் அகில அண்டங்களில் உள்ள அத்தனை உயிருக்கும் உணவளிப்பவன் அவனே என்னும்படி அவன் காலடியில் உள்ள மானுக்குப் புல்லருத்துகிறான். துடியேந்தியகை, கபாலம் ஏந்திய கரம், அற்புத அலங்காரத்தோடு கூடிய மணிமகுடம் எல்லாம் நல்ல அழகோடு உருவாகியிருக்கிறது இந்த அற்புதமான சிற்ப உருவிலே.

இந்த சிற்பத்தைக் காணவேண்டுமானால் மாயூரத்தை அடுத்த வழுவூருக்குப் பயணம் கட்டவேண்டியதுதான்.

கஜசம்ஹாரர் - வழுவூர்.

மாயூரத்திற்குத் தெற்கே ஐந்து மைல் தூரத்தில் உள்ள சிறிய ஊர் வழுவூர். இது அட்ட வீரத்தலங்களில் ஒன்று. இங்குதான் பிக்ஷாடனராக வந்த சிவபெருமானையும், மோகினியாக வந்த மகாவிஷ்ணுவையும் காணலாம் நாம்.


இவர்களை யெல்லாம்விட சிறந்த செல்வமாக இங்கு இருப்பவர்தான் கஜசம்ஹாரர். தாருகாவனத்து ரிஷிகள் செய்த ஆபிசார யாகத்தில் எழுந்த பாம்பை எடுத்து மாலையாக அணிந்தார். முயலகனை காலின்கீழ் அழுத்திக்கொண்டார். புலியை உரித்து தோலை உடுத்திக்கொண்டார். கடைசியாக வந்த அந்தப் பெரிய யானையின் உடலுக்குள்ளேயே பாய்ந்து அதைக் கிழித்துக்கொண்டு உக்ரமூர்த்தியாக வெளிப்பட்டார். இது எல்லாம் எத்தனையோ அரிய தத்துவங்களை எல்லாம் உள்ளடக்கிய கதை.

ஆனால், எவ்வளவோ அழகான நுணுக்க வேலைகளை யெல்லாம் உள்ளடக்கிய சிறந்த சிற்பம் ஒன்று உருவாகி யிருக்கிறது இந்த ஊரிலே. அந்த கஜ சம்ஹாரத்தைத்தான் பார்க்கிறீர்கள் பக்கத்திலே. ஒரு காலை ஊன்றி ஒரு காலை மடக்கி, இரண்டு கைகளையும் அகலவிரித்து யானையைக் கிழித்துக்கொண்டு வரும், அதிபயங்கர நிலையை அழகாக வடித்திருக்கிறான் சிற்பி. கல்லில் இதே உருவை அமைத்து நிறுத்தினன் கங்கைகொண்ட சோழன் மகனான இரண்டாம் ராஜராஜன் தாராசுரத்திலே. அதே உருவை அதைவிட மென்மையான அழகுகள் எல்லாம் தோன்ற அற்புத உருவில் ஆக்கினன், அவன்பின் வந்த மற்றொரு சோழ மன்னன். சோழ மன்னர்கள் எல்லாம் நல்ல கலை வளர்த்த காவலர்கள் ஆக அல்லவா அமைந்திருக்கிறார்கள். இல்லாவிட்டால்

தண்ணீரும் காவிரியே
தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழமண்டலமே

என்று பாடுவானா கம்பன்?





மாதிருக்கும் பாதியன்.

ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம் என்று முழக்கு கிறுர்கள் இன்றைய சமூகச் சீர்திருத்தக்காரர்கள். ஆனல் அன்றே இந்த சமூகச் சீர்திருத்தத்தை அமுலுக்கு கொண்டு வந்திருக்கிறுன் சிவபெருமான். தன் உள்ளத்தில் மட்டும் அல்ல, உடலிலேயே பாதியைப் பகிர்ந்து கொடுத்திருக்கிறுன் தன் துணைவியாம் பார்வதிக்கு.

உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் ஆண் பெண் என்ற இரண்டு தத்துவங்களுக்குள் அடங்கும். என்றுலும், ஆணும் பெண்ணும் தனித்திருக்கும்போது உயிர்கள் உருப்பெறுவதில்லை வளர்ச்சிபெறுவதில்லை. இரண்டும் ஒன்றுக இணைகிறபோது தான் ஊன், உயிர், உணர்வு எல்லாம் தோன்ற ஆரம்பிக்கின்றன. இந்த உண்மையைத்தான் உணர்த்துகிறுன் நமக்கு இறைவன் இந்த அர்த்தநாரி வடிவத்தில்.

ராஜராஜன் காலத்துக்கு முன்பே இந்த மாதிருக்கும் பாதியன், மங்கைபங்கன் தமிழ்நாட்டில் பிரசித்தமாக இருந்திருக்கிறுன். கல்லில் உருவாகி இருக்கிறுன் மாமல்லபுரத்திலே. என்றுலும், சோழர் காலத்துக் கோயில்களில்த்தான் இந்தச் சிலை உருவம் உயிர் பெற்றிருக்கிறது. ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம் என்றுலும், பத்துமாதம் பிள்ளையை ஏந்திச் சுமக்கும் பெண்ணின் வயிற்றை, அந்த வயிற்றை சுற்றி வட்டமிடும் பிட்டியை, ஒட்டிச்சுருங்கிய ஆண்மகன் வயிற்ருேடு ஒத்த நிலையில் பொருத்துவது எப்படி? அதற்கு விடை கண்டு பிடித்திருக்கிறுன் சிற்பி. அர்த்தநாரி மூர்த்தியில் இடப் பகுதியில், பெண்ணின் எழில் எல்லாம் தோன்ற பிட்டியைப் பெரிதாக்கி அதற்கே, ஒரு அழகு கொடுத்திருக்கிறுன். இந்த அற்புதமான சிலை இன்று இருக்கிறது கும்பகோணம் நாகேஸ்வர சுவாமி கோயிலிலே மேலைப் பிரகாரத்திலே.

‘தோலும் துகிலும், குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும்
சூலமும் தொக்கவளையும் உடைத் தொன்மைக்’

கோலம் என்று மணிவாசகர் பேசும் கோலம் இதுதானே என்று தோன்றும் சிலையைக் கண்டால்?


அரசிளங் குமரி.


மாதிருக்கும் பாதியனைக் கண்ட அதே நாகேஸ்வரன் கோயிலிலே, இன்னும் ஒரு அழகிய சிலை. சிலையில் இருப்பது யார் என்று தெரியவில்லை. இளங்கோ அடிகள் சித்தரித்துள்ள பத்தினி தெய்வத் திருவுருவம் என்று மயங்கியவர்களும் உண்டு. அது ஆதாரமற்றது மாத்திரமல்ல, உண்மையாகவும் இருத்தல் இயலாது.

கண்ணகி வடிவத்தை சிற்பி உருவாக்க விரும்பியிருந்தால், மெய்யிற் பொடியையும், விரித்த கருங்குழலையும், கையில் தனிச் சிலம்பையும் அல்லவா காட்டியிருப்பான். தீதிலா வடமீனின் திறம் இவள் திறம் என்றல்லவா நம்மை உணர வைத்திருப்பான்.

அப்படி இல்லாமல், சொல் நலம் கடந்த காமச்சுவையை ஓர் உருவம் ஆக்கி, இந்நலம் தெரியவல்லார் எழுதியது என்ன அல்லவோ, நிற்கிறாள் இவள். சோழ சாம்ராஜ்யம் உச்சநிலையில் இருந்தபோது உருவாகி இருக்கிறது இந்தச்சிலை. 'மெலியுமிடை, தடிக்குழலை, வேய் இளந்தோள், சேயரிக்கண் வென்றிமாதர்' என்றெல்லாம் அன்று கவிச்சக்ரவர்த்தி கம்பன் பாடினனே அது இப்படிப்பட்ட கட்டழகிகளைப் பார்த்தபின்தானே என்னவோ! உருவம் முழுவதிலுமே ஒரு கவர்ச்சி. கவிதைகளிலே காண்கிறோமே ஒரு 'ரிதம்' (Rhythm) அப்படிப்பட்ட ஒரு லயத்தையே காண்கிறோம் இந்தச்சிலையில்.

இவள் ஒரு நல்ல அரசிளங் குமரியாகத்தான் இருத்தல் வேண்டும். இல்லாவிட்டாலும் பரவாயில்லை. கல்லுருவிலே வடித்த கட்டழகு இது என்று நம்மைத் திருப்தி செய்து கொள்ளலாம் தானே.





அடம்பர் ராமன்.

சக்ரவர்த்தி திருமகனுகிய ராமன், அவன் புகழ் பாடும் ராமாயணம் எல்லாம் வடநாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்குள் வந்தவை, ஆதலால் ஒதுக்கப்படவேண்டும் என்று கூறுவார் சிலர் உண்டு என்றாலும் அவர்கள் எண்ணிக்கையில் மிக மிகக் குறைந்தவரே. தமிழ்நாட்டில், ராமனுக்கு இருக்கிற செல்வாக்கு வேறு எந்தக் கடவுளர்க்கும் இல்லை என்று எளிதாகக் கூறி விடலாம். இதற்குக் காரணம் என்ன ?

தமிழன் எப்போதுமே ஒழுக்கத்திற்கு ஏற்றம் கொடுத்தவன். ஒருத்தனும் ஒருத்தியுமாக மனையறம் நடத்தி, பொருள் ஈட்டி, இன்பம் துய்த்து, வீடு பெற விழைந்தவன். இப்படிப்பட்ட தமிழன், 'ஏகும் நல்வழி அல்வழி என்மனம்' என்ற உறுதிப் பாட்டிலும், "இந்த இப் பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்" என்று செவ்வியவரம்பிலும் நின்றவனை வந்தித்து வணங்கத் தயங்குவானு? அதனுல்த்தான் அவன் புகழ்பாடும் காவியம் எழுதினுன்; ஓவியம் தீட்டினுன்; சிற்பத்தில் வடித்தான். கல்யாணராமன்,கோதண்டராமன், வேங்கடராமன், சீதாராமன், ரகுராமன் என்று எண்ணற்ற பெயர்களால் அவனை அன்போடு அழைத்தான். வடநாட்டிலிருந்து வந்தாலும் நல்ல தமிழனுக, தமிழ்நாட்டில் நிலைத்து நின்றுவிட்டான்.

காவிரிக்கரையிலே இந்தக் காவிய நாயகன் திருவுரு எப்படி எப்படி எல்லாமோ உருவாகிஇருக்கிறது. என்றாலும் நன்னிலத்தை அடுத்த அடம்பர் என்னும் சின்னஞ் சிறிய ஊரிலே, நீண்டுயர்ந்த விமானமோ கோபுரமோ இல்லாத ஒரு சிறிய கோயிலிலே கோதண்டம் ஏந்திய கையனுகக் காட்சி கொடுக்கும் அந்த ராமன்தான் கவிச்சக்ரவர்த்தி கம்பன் பாடிய அந்தமில் அழகன், ஓவியத்து எழுத ஒண்ணு உருவத்தன். கண்ணேடு காதையுமே கொஞ்சம் தீட்டி உற்றுக்கேட்டால், கோதண்டத்தில் கட்டிய மணிகள் கணகண என்று ஒலிப்பது கேட்கும். கேட்கா விட்டால், உங்கள் காதுகளில்த்தான் ஏதோ கோளாறு இருக்க வேண்டும்.


வில்லேந்திய வேலன்.

அருணதள பாத பத்மம்
அனுதினமுமே துதிக்க
அரிய தமிழ் தான் அளித்த
மயில் வீரன்

தமிழ்மக்களின் தனிக் கடவுள். குன்றுதோ றுடும் குமரனுக, அழகு கனிந்து முதிர்ந்த இளங்கனியாக அவன் தமிழர்களுக்கு என்றும் காட்சி கொடுக்கிருன். வழிக்குத் துணை அவன் வேலும் மயிலும் என்ற உறுதியில் மக்கள் நிலைத் திருக்கிருர்கள். அதனுல்த்தான், அழித்துப் பிறக்க ஒட்டா அயில் வேலனை வழிவழியாக வணங்கியிருக்கிருர்கள்.

ஆனல், இந்த வேலே விளங்கு கையனுக இருந்தவன், மற்ருெரு கையில் வில்லையும் ஏந்திக்கொள்கிருன் ஒரு சமயம். வானோர் வணங்கும் வில்த் தானைத் தலைவனுகவும் மாறிவிடுகிருன். இது எந்த நிலையில் என்று கேள்வி ?

தமிழ்நாட்டின் சைவ வைணவச் சண்டைகள் உலகறிந்தது. என்ருலும், மாலோன் மருகனுகிய இந்த வேலனிடத்து வைணவர்கள் குரோதம் கொள்வதில்லை. அதைப்போலவே, சீலத்தில் சிறந்த ராமனும் சைவப்பெருமக்களால் ஒதுக்கப் பட்டவன் அல்ல. ஆதலால், வில்லேந்திய ராமனை வேல் ஏந்தச் செய்து, வேல் ஏந்திய குமரனை வில்லேந்தச் செய்து, சமரசம் காண முற்பட்டிருக்கிருர்கள் கலைஞர்கள். இப்படித்தான் வில் ஏந்திய வேலன் உருவாகியிருக்கிருன் தமிழ்நாட்டில். அந்த வேலன் திருவுருவம் இன்று இருப்பது சரித்திரப் பிரசித்தியும் இலக்கியப்பிரசித்தியும் உடைய காவிரிப்பூம்பட்டினத்தை அடுத்த சாய்க்காட்டிலேதான். வீர செளந்தர்யமும் குண செளந்தர்யமும் இந்தத் திருவுருவிலே போட்டி போடுகிறது. வேலேந்திய ராமனுக இருக்கலாமோ என்ற ஐயம் வேண்டியதில்லை. மனித உருவந்தாங்கிய ராமனுக்கு நான்கு கைகள் அமைப்பது வழக்கம் இல்லை அல்லவா ? ஆகவே, இவன் தெய்வ உருவில் தோன்றும் வில்லேந்திய வேலனே என்று தெளியலாம்.





சூரியனார்கோயில் சூரியன்

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்

கதிரவன் வணக்கம் வேதகாலத்திலேயே நம் நாட்டில் தோன்றியிருக்கிறது. வான் நின்று இழிந்து வரம்பு இகந்த மாபூதத்தின் வைப்பு எங்கும் ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும் உளன் இறைவன் என்ற உண்மையைக் கண்ட அன்றே, ஒரு தனி முதல்வனாகிய சூரியனை கடவுளாக வணங்கியிருக்கின்றனர் மக்கள். அவனைக் கண்கண்ட தெய்வ மாகக் கருதி வழிபட்டிருக்கின்றனர்.

சூரிய நமஸ்காரத்தை மக்கள் ஆரம்பித்தாலும், சூரியனை நவக்கிரஹங்களின் வரிசையிலே வைத்து, ஒன்பதில் ஒன்றாகக் கணக்கிட்டார்களே ஒழிய, அவனுக்கென்று தனிக்கோயில் எடுப்பித்தார்கள் இல்லை. இந்த நிலையில்தான் வடக்கே கோனாரக்கிலும், தெற்கே சூரியனார் கோயிலிலும் சூரியனுக்கு தனிக்கோயில் உருவாயிற்று. மூல விக்ரஹமாக சூரியன் அமைந்தார். உஷையும் சந்தியாவும் நாயகிகளாக அமைந்தனர். நந்தியின் ஸ்தானத்தில் பாயும் பரிமா எழுந்தது. சுற்றுப் பிரகாரத்தில் மற்றைய எட்டுக்கிரஹங்களும், ஒன்றையொன்று நோக்காமல் வக்கரித்துக்கொண்டு நின்றன.

இப்படி அமைந்த சூரியனார்கோயில் சூரியன்தான் பக்கத்தி லிருப்பவன். நல்ல பொன்வண்ண மேனி, அவன் கரம் தீண்டிய உடனே மலரத் துடிக்கும் தாமரை, அங்கம் முழுவதும் அழகு அழகான ஆபரணங்கள், தலையைச்சுற்றி சோதி சொரூபமான ஒளி வட்டம் எல்லாம் உருவாகி இருக்கிறது, இந்தச் சிற்ப உருவிலே.

'உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு'

என்று நக்கீரர் அன்று பாடியதும் இவனைக் கண்டு தானோ என்று எண்ணத் தோன்றினால் வியப்பில்லை.



கலைமகள் வணக்கம்.

சகல கலா வல்லி மாலை.

திருப்பனந்தாள் காசி மடத்து ஸ்தாபகர்

ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்.

★

1. வெண் தாமரைக்கு அன்றி நின்பதம்
தாங்க என் வெள்ளை உள்ளம்
தண் தாமரைக்குத் தகாது கொலோ?
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்து
ஆக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

2. நாடும் பொருள் சுவை சொல் சுவை
தோய்தர நால் கவியும்
பாடும் பணியில் பணித்து அருள்வாய்
பங்கய ஆசனத்தில்
கூடும் பசும் பொன் கொடியே
கனதனக் குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

3. அளிக்கும் செழுந் தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்து உன் அருள் கடலில்
குளிக்கும் படிக்கு என்று கூடும் கொலோ?
உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

4. தூக்கும் பனுவல் துறை தோய்ந்த
கல்வியும் சொல் சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்து அருள்வாய்
வட நூல் கடலும்
தேக்கும் செழும் தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந் நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

5. பஞ்சு அப்பு இதம்தரு செய்ய பொன்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே?
நெடும் தாள் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன் செம்
நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சம் தவிசு ஒத்து இருந்தாய்
சகல கலாவல்லியே.

6. பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிது எய்த நல்காய்
எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெம் காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

7. பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின்கடைக் கண் நல்காய்
உளம் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத் தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ஓதிமப் பேடே
சகல கலாவல்லியே.

8. சொல் விற்பனமும் அவதானமும்
கவி சொல்ல வல்ல
நல் வித்தையும் தந்து அடிமை கொள்வாய்
நளின ஆசனம் சேர்
செல்விக்கு அரிது என்று ஒரு காலமும்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

9. சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ்
ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்? நிலம் தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரச அன்னம் நாண நடை
கற்கும் பத அம்புயத் தாயே
சகல கலாவல்லியே.

10. மண் கண்ட வெண் குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண் கண்ட அளவில் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண் கண்ட தெய்வம் பல் கோடி
உண்டேனும் விளம்பில் உன் போல்
கண் கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே.


சுப்பு

PRINTED AT THE M. K. PRESS, TANJORE.